1428

No. M.2210 வருஷ சந்தா:— உள் நாடு / வெளிநாடு } ரூ. 1—8

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் IV November 1926 இதழ் 2

OFFICE OF THE REGISTRAR OF ...
5 MAR 1927

...ன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
...வல்லிக்கேணி, மதறாஸ்.

SL
2311, N22 J27
N26·4·2
182831

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஜகன்மோகினி.

இது ஓர் மாதாந்த சஞ்சிகை. இச் சஞ்சிகையின் மூன்றாவ தாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளால் எழுதப்பட்ட வைதேகி என்ற அபூர்வத் துப்பறியும் நாவல் வெளிவந்தது. இதன் நான்காவதாண்டில் மேற்படியாரால் இயற்றப்பெற்ற "பத்மசுந்தரன்" என்ற நாவல் வெளி வருகிறது. இச்சஞ்சிகையை எல்லோரும் ஆதரிக்கும் பொருட்டே இதற்கு வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1—8—0 தான் வைத்திருக்கிறது. மேற்படி குறைந்த சந்தாவுடன் பல அரிய விஷயங்களையும், ஹாஸ்ய வினோதங்களையும், சிறந்த் துப்பறியும் நாவல்களையும் தாங்கிவரும் இஜ்ஜெகன் மோகினியை அறிவிற்சிறந்த எல்லோரும் ஆதரிக்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

நிற்க, இச்சஞ்சிகைக்கு ஐந்துபேர்களை சந்தா சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாமாக அனுப்பப்படும். சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பினால் அதிகமாக 3 அணா செலவாகுமாகையால், வேண்டியவர்கள் தயவு செய்து மணியார்டர் அனுப்புவதே உசிதம். இச்சஞ்சிகைக்கு ஏற்கெனவே சந்தாதாரராக இருப்பவர்கள் மணியார்டர் சீட்டில் தமது சந்தா நம்பரைக் குறித்தனுப்பும்படிக் கோருகிறோம். புதிதாய் பணமனுப்புகிறவர்கள் தமது விலாஸத்தை மணியார்டர் சீட்டில் coupon விவரமாய் எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்.
26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ.

Tamilian Residents of Calcutta !

We have pleasure in informing that

MR. R. VASUDEVAN
c/o "CAPITAL" LTD.,
Post Box No. 14,
CALCUTTA.

has kindly consented to act as our Honorary Representative there. He is authorised to collect subscriptions and grant receipts on our behalf. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the journal can be had from him.

JEGANMOHINI OFFICE,
26, Car Street, Triplicane, Madras

OF THE REGISTRAR OF
15 MAR 1927

3-வது அதிகாரம்

மணத்தக்காளியம்மாள்—வரப்ரஸாதி

திருவல்லிக்கேணி ட்ராம்வே ரோட்டில் ஒரு சிறிய மாடி வீட்டின் முன் கட்டுக் கூடத்தில் ஒரு விசுப்பலகையின் மீது நாற்பது வயதுடைய ஒரு மாது உட்கார்ந்துகொண்டு ஏதோ கீரையை ஆய்ந்துகொண்டிருந்தாள். அச்சமயம் அங்கு இன்னொரு மாது பிரவேசித்துச் சிரித்துக்கொண்டே "என்ன எல்லம்மா! சாப்பாட்டு வேலைகளெல்லாம் முடிந்து விட்டனவா?" என்று கேட்ட வண்ணம் அவளும் விசுப்பலகையில் உட்கார்ந்தாள்.

இவர்களிருவரும் என்ன சம்பாஷிக்கப் போகிறார்கள் என்பதை நாம் விவரிக்கு முன், அந்த வீட்டுக்காரியினதும், அவளது புருஷன், புத்திரனுடையதுமாகிய எல்லோருடைய குண விசேஷங்களையும், புத்தியின் திறமையையும், மற்றுமுள்ள அவர்களது குடும்ப வரலாற்றையும் தெரிந்துகொள்வது அத்யாவசியமாகையால், அதைக் கூறிப் பின் கதையைத் தொடங்குவோம்—

அந்த வீட்டுக்காரருக்கு அண்ணாவி முதலியார் என்று பெயர். அவர் மனைவிக்கு எலங்காளியம்மாள் என்று பெயர். இவர்களிருவரும் சகலமான அம்சங்களிலும் ஒற்றுமை வாய்ந்த தம்பதியாக விருக்கிறார்கள். இருவரது குணமும் ஒரே தராசில் வைத்து நிறுத்தமாதிரியாக இருக்கிறது. இவர்கள் பணத்தைச் சேர்ப்பதிலும் செட்டு செய்வதிலுமே கண்ணுங்கருத்துமாக இருப்பார்களே யன்றி எச்சல் கையினாலே கூடக் காக்கை ஓட்டமாட்டார்கள். சாதாரணமாக உலகத்தில் எத்தனையோ பெரிய மனிதர்களெல்லாம் ராவ்பஹதூர், திவான்பஹதூர் முதலிய பட்டங்களை எவ்வளவோ பணத்தை வாரி இரைத்துச் செலவிட்டுக் கோகர்ணம், கஜகர்ணம் போட்டுப் பெறுகிறார்கள். அந்த விதமான கஷ்டங்களில் ஒரு சிறிதுமில்லாமலே தலைமுறை தலைமுறைக்கும் தாங்கக்கூடியதான பட்டப்பெயரை இத் தம்பதிகள் ஒரு நிமிஷத்தில் பெற்றுவிட்டார்கள். அப்பெயர்களாவன:— அந்தம்மாளுக்கு மணத்தக்காளியம்மாளென்றும், அவருக்கு அழுமுஞ்சி அண்ணாவி என்றும் பட்டம். இவர்களுக்கு

("மிளகுதக்காளி" என்பது மணத்தக்காளி என வழங்குவதால் அப்படியே குறிப்பிடுவோம்.)

அத்தகைய பட்டம் யாது காரணத்தினால் வந்ததென்றால் இவர்களுடைய குணவிசேஷத்திற்கு மெச்சியே இப்பட்டத்தை வெகு பேர்கள் சேர்ந்து அளித்தார்கள்.

இவர்களுக்கு, தெற்கே ஒரு கிராமத்தில் நிலங்களிருந்தன. அந்த நிலங்களைப் பயிரிட்டு வேலை செய்தால் அந்தக் கூலி யாட்களுக்குப் பணம் கொடுக்க நேருமே என்ற செட்டினால் அதைக் கரம்பாகவே போட்டுவிட்டார்கள்; நிலத்தைப் பயிரிட்டதனால் தங்களுக்கு வரக்கூடிய தானிய லாபத்தை பொரு சிறிதும் கவனித்தாரில்லை. தமது கைப்பணத்தை அநியாயமாக ஒருவருக்குக் கொடுத்துவிடுவதா என்ற மூட மதியையே மேற்கொண்டவர்களாகையால், அதைப் பயிரிடாமல் தரிசாய்ப் போட்டுவிட்டார்கள். பிறர் யாராவது இதை எதற்காக இவ்விதம் பாழடிக்கிறீர்கள் என்று கேட்டால் அவர்களுக்குக் கோபம் மூக்குக்குமேலே வந்துவிடும். "எங்கள் விஷயத்தில் யாரும் தலையிடவேண்டாம். நாங்கள் என்னவாவது செய்து கொள்கிறோம். அதைப்பற்றி உங்களுக்கென்ன?" என்று ஒரே பேச்சில் முடித்துவிட்டுச் செல்வார்கள். பிறகு எல்லோரும் பேசாமற் போய் விடுவார்கள். இவர்களுடைய நிலங்களெல்லாம் வெறும் கட்டாந்தரைபோல் இருக்குமாதலால் அதுவும் அநேகருக்கு அநேக விதத்தில் உதவியாகவிருந்தது. அதாவது, பக்கத்து ஊர்களின் மாடுகளை ஓட்டிக்கொண்டுவரும் மாட்டுக்காரப் பையன்கள் அந்தக் கட்டாந்தரையில் பிரமாண்டமாய்வளர்ந்திருந்த புளியமரம் வேப்ப மரங்களின் நிழலில் நிச்சிந்தையாய்ப் படுத்திருந்து பிறகு மாட்டையோட்டிக் கொண்டுபோவதுவழக்கம். இன்னும் வெளியூர்களிலிருந்து பிரயாணஞ் செய்யும் வழிப்போக்கர்களுக்கும் குருவிக்காரர்களுக்கும் அந்த இடம் சமையல்செய்து தின்று போகச் சௌகரியமாயிருந்தது. இராக்காலங்களில் அனேக ஏழை ஜனங்கள் நிலவுகாலத்தில் அங்கு மரத்தடியிலும் மற்ற இடத்திலும் படுத்துக்கொள்வது வழக்கமாகவும் இருந்தது.

இவர்கள் வருஷந்தோறும் பயிரிட்டாலும் இடாவிட்டாலும் சர்க்காரில் வரிமட்டும் சரியாக கக்கவைத்து வாங்கிக்கொண்டே இருந்தார்கள். ஊரார் எல்லாரும் இவர்களின் மூட மதியைப்பற்றி அதிகமாகப்பேச ஆரம்பித்தார்கள். இவர்கள் காதில் அவற்றில் சில வார்த்தைகள் விழுந்தன. இதனால் இருவரும் ஒருநாள் யோசனை செய்யத் தொடங்கினார்கள்:—

182831

நம்முடைய நிலங்களைப் பிறருதவியைக் கொண்டு பயிரிடுவதானால் நாம் அவர்களுக்குக் கூலி கொடுக்கவேண்டும். ஆகையால் ஊராரிடம் வார்த்தைகேளாமல் நாம் இருவரும் இராகாலத்தில் தினம் சென்று பயிரிட்டுவிடலாம்—என்று ஒரு மூடத் தீர்மானம் செய்துகொண்டு அன்று இரவே இருவரும் புறப்பட்டார்கள். ஒரு குடம், ஒரு தாம்பு கயிறு, ஒருவிளக்குமாறு, ஒருமண்வெட்டி, ஒருகட்டப்பாறை, ஒருகூடையில் கொஞ்சம் நெல் இவைகளை எடுத்துக்கொண்டு ஒருலாந்தருடன் தமது நிலமிருக்கு மிடத்திற்கு ஊரில் சந்தடி அடங்கியபிறகு பைசாசங்கள்போல வந்து சேர்ந்தார்கள். அவ்விருவரில் ஒருவருக்காவது படிப்பென்கிற வாசனைகூடக் கிடையாது. ஆகையால் அவர்கள்மனம் போனவாறு மூட யோசனை செய்து அதன் வழியே செல்லலாயினர். நிலத்தையடைந்த மணத்தகாளியம்மாள் எந்த விடத்தைப் பயிரிடலாம் என்று சுற்றிப் பார்த்தாள். பிறகு அங்கு ஏற்றமிறைக்கும் கிணறு இருந்தது. அதற்குச் சமீபத்த இடங்களையெல்லாம் பயிரிடுவோம் அதுவே நமக்குத் தலைமுறைக்கும் காணும் என்று கூறி அந்த இடத்தை நன்றுய்ப்பெருக்கினள். பிறகு இருவரும் மண்வெட்டி கட்டப்பாறை இரண்டினாலும் அவ்விடத்தை வெட்டினார்கள். வெட்டிய மண்ணையெல்லாம் முதலியாருடைய மேல் அங்கவஸ்திரத்தை ஓர் இடத்தில் விரித்து அதில் கொட்டி, வெட்டிய விடத்தில் நிரம்ப கிணற்றுநீர் எடுத்துத் தெளித்து பிறகு ஏர் உழுவதற்கு என்னசெய்வதென்று யோசித்தார்கள். பிறகு அதையும் இருவருமே செய்துவிடுவதென்று முடிவு செய்து ஒரு ஜோடிமாடுகளைப் போல் கை கோர்த்துக் கொண்டு தண்ணீர் தெளித்த விடங்களை எல்லாம் காலால் மிதித்துத் துகைத்துக்கொண்டு சவாரி செய்யலானார்கள். அந்த நிலங்களோ சமீபத்தில் மாதக் கணக்கில் மழையின்றி வெயில் காய்ந்து உலர்ந்து வெடித்திருந்தமையால் அதில் சவாரி செய்யும் தம்பதிகளின் கால்களில் வெடிப்புமண் முள்ளைப்போல் குத்தவாரம்பித்தது. இருவரும் காரியத்தின்மீது கண்ணாக எடுத்ததை முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தால் வலியைக்கூட சட்டை செய்யாமல் வலிக்கும்போது நெளிவதும் மற்றபோது நிமிர்ந்து நடப்பதுமாக விருந்தார்கள். இருவரும் சாதாரணமாகப் பார்ப்பதற்கு எருமைக்கடாவின் சாயலைப்போல் கருத்த மேனியுடன் பருத்துத் தூரதிருஷ்டிக்கு ஏர் உழும் எருமைக்கிடாவைப்போலவே காணப்பட்டார்

கள். மணப்பந்தலில் அரசாணிக்கால் வலம் வரும்போது தம்பதிகள் வெட்கத்தால் அங்குள்ள ஜனங்களைப் பாராமல் நாணிக் கோணித் தலையைக் குனிந்துகொள்வதுபோல் இவர்களும் கால்வலியால் தங்கள் தேகம் ஆடி அசைய நடந்தார்கள். இவ்விதம் இருவரும் ஏர் உழுது பின் கூடையில் கொண்டுவந்திருந்த விதைகளை வாரி அவ்விடத்தில் நிறைய இரைத்துவிட்டுப் பின் முன்பே முதலியார் அங்கவஸ்திரத்தில் மூட்டை கட்டி வைத்திருந்த மண்ணை எடுத்து விதையின்மேல் கொட்டி மூடிவிட்டு, திருஷ்டி வாராமலிருக்க ஒரு கல்லை எடுத்து அங்கு நிறுத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். இவர்களாக மனம் வந்து ஓர் உமிநூக்கும் பிறருக்குக் கொடுக்கமாட்டார்கள். இவர்களின் மூட மதியால் செய்த வேலையும் தர்மார்த்தமாகவே செய்ததுபோலாயிற்று. எப்படியெனில், மறுநாள் விடிந்தபிறகு குருவி, காக்கை முதலிய பக்ஷிகளுக்கு அந்த விதை ஆகாரமாயிற்று. பின், அன்றிரவிலும் அவர்கள் அவ்வாறே வந்து ஜலம் தெளித்துவிட்டுச் சென்றார்கள். அடுத்த நாளே ஊரார் இதனைக் கண்டு "இதென்ன ஆச்சரியம்! இங்கு கொத்தி வெட்டி இருக்கிறதே" என்று பேசவாரம்பித்தார்கள். இதற்குள் அவர்களுக்கும் சலிப்பேற்பட்டுவிட்டது.

பின்பு அவர்கள் "இந்த நிலத்தில் பாடு படுவதெல்லாம் பயனற்று விடுகின்றன. இனி இந்நிலத்தின் தொல்லையே வேண்டாம். இதை விற்றுவிட்டு நாம் பணத்தை வட்டிக்குப் போட்டுப் பிழைப்போம்" என்று தீர்மானித்துக்கொண்டு நிலத்தை விற்றுவிட்டு அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு பட்டணத்திற்கு வந்து, திருவல்லிக்கேணி டிராம்வே ரோட்டில் சிறிய வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதிலிருந்து வந்தார்கள். கையிலிருந்த பணத்தை யாரிடமாகிலும் அதிக வட்டிக்குக் கொடுத்தால் பணம் சரியானபடி வருமோ வாராதோ என்ற பயத்தினால் பாங்கியில் போட்டுவிட்டார்கள். அதில் கிடைக்கும் சொல்ப வட்டியை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்யலானார்கள். இவர்களுக்கு நெடுநாள் குழந்தையில்லாமலிருந்து பிறகு இவர்களைவிட அதிக புத்திசாலியான ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு வரப்ரஸாதி என்று நாமம் சூட்டினார்கள். அந்த முதலியாருக்கு இயற்கையிலேயே கண் மாத்திரம் முண்டைக்கண்ணாகவே இருந்தது. அவர்கள் வீட்டுக்கு வரும் பிச்சைக்காரர்களுக்குத் தமது

வாயினால் பிச்சை இல்லை என்று இருவரும் சொல்வது கிடையாது. அதற்காக முதலியார் தந்திரமாய் தினம் உதயமானதும் வீட்டுத் தெருத் திண்ணைமீது கையில் ஒரு கார்டை வைத்துக்கொண்டு அதைப் பார்த்தவண்ணமே உட்கார்ந்திருப்பது வழக்கம். அவருக்கு ஏற்கெனவே கண் முண்டைக் கண்ணுகையால், இன்னும் அதோடு கடிதத்தை உற்றுப் பார்த்தவண்ணமிருப்பதால் கண்ணில் நீர்பெருக ஆரம்பித்துச் சிவந்துவிடும். இந்தக் காட்சியைக் கண்ட பிச்சைக்காரர்களெல்லாம் "ஐயோ பாவம்! ஐயா வீட்டில் யாரோ இறந்துவிட்ட செய்தி கடிதத்தில் வந்திருக்கின்றது. அதைப் படித்ததும் துக்கம் தாங்காமல் முதலியார் அழுகிறார். இந்தச் சமயம் நாம் பிச்சை கேட்கலாகாதென்று தாமாவே போய்விடுவார்கள். குடுகுடுப்பைக்காரன் பிச்சைக்கு வந்து இந்தக் காட்சியைக் கண்டு தான் ஏதாவது சொல்லிவிட்டுப் போக வேண்டுமென்று எண்ணி, "குடுகுடுகுடுகுடு ஐயா வூட்டுக்கு இப்போது ஓர் எழவு சங்கதி வந்திடிச்சு. இந்த எழவு இதோட தொலயும்ணு பலுகடி அம்பா பலுகவே. மலையாள பகவதி! ஐயா வூட்டுலே இப்போ செத்துப்போன உசுரோடு சனியன் உட்டுட்டான்னு நெனச்சுக்கங்கோ ஐயாவுக்கு கஷ்டகாலம் நீங்கிடுச்சு! மாரியாத்தா பலத்தாலே இனி கொறவில்லே. ஐயோண்ணு அழுவுராரேடி ஐயா மாரியாத்தா! மலையாள தேவி! கண் தொரந்து பாரடி குடுகுடுகுடுகுடு", என்று பாடிவிட்டு ஓடிவிடுவான். அந்தோ இவர்களுடைய சுக்காஞ்சட்டித்தனத்தின் கொடுமையால் இவர்களுடைய மனிதரில் யாரோ இறந்துவிட்டதாகத் தினம் பட்டம் கட்டிவிட்டுப் பிச்சைக்காரர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். பிறகு நாளடைவில் இவர் செய்வது ஜாலம் என்று தெரிந்துவிட்டதால் இவருக்கு அழுமூஞ்சி அண்ணாவி என்று பட்டப்பெயர் வந்தது. இவர் பிரதாபமிங்ஙனமிருக்க, அந்தம்மாளின் மகிமையோ அற்புதமானது. அந்தச் சிறிய வீட்டில் புழைக்கடையில் கொஞ்சம் மண்தரை இருந்தது. அந்தவிடத்தில் கொள்ளுமான மணத்தக்காளிச் செடிகள் பயிரிட்டு அவைகளையே தமது குடும்பத்திற்கு ஆதரவாகப் பாதுகாத்து வருகிறாள். இவர்கள் மனசோடு பிறருக்கு ஒருவேளை கூட அன்னமிடுவதற்கு இசையாது. இவர்களது வீட்டில் ஏதாவது திதி, முதலிய விசேஷ தினங்களில் பிறர் யாராவது போஜனத்திற்கு வந்தால் அவர்களுக்கு அந்தப் புழைக்கடை மணத்தக்காளியினால் எத்தனைவிதம் செய்ய

சாத்தியமோ அத்தனை விதமும் தினுசு தினுசாக மணத்தக்காளிக்காய் மசியல், அதே கீரைப் பொரியல், அதே காய் வத்தல் குழம்பு, அதன் இளம் கீரைகளையும் நரம்புகளையும் வைத்தரைத்துத் துகையல் முதலியவைகளைச் செய்து போஜனம் செய்விப்பார்கள். போஜனம் செய்ய இலையில் உட்கார்ந்தவர்கள் இலையை விட்டு எழுந்திருக்க மனம் வராதபடி அங்கேயே உட்கார்ந்துகொண்டு தாம் புசித்த மாதுரியமான பதார்த்தத்தின் சுவையை இன்னும் அனுபவித்துக்கொண்டும், பல்லினிடுக்கில் புகுந்துகொண்ட மணத்தக்காளியின் குச்சியையும் இலையையும் குத்திக் குத்தி எடுத்துக்கொண்டும் உட்கார்ந்திருப்பார்கள். அதைக் கண்ட மணத்தக்காளி யம்மாளோ "இன்னுமிவர்கள் இலையைவிட்டு எழுந்திருக்கவில்லையே. புசித்ததெல்லாம் ஜீரணமாய் இன்னும் பசி எடுத்து அன்னம் கேட்பார்களானால், என்ன செய்வது" என்று எண்ணி முன்னமே தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு புழைக்கடைப் பக்கம் போய்விடுவாள். போஜனம் செய்பவர்கள் பல்லிலிருப்பதை எடுத்துவிட்டு எழுந்து போவார்கள். தாம்பூலம் கொடுத்து முதலியார் தக்ஷிணைக்குப் பதில் பக்ஷமாகப் பேசியனுப்பி விடுவார். தாம்பூலம் எடுத்துக்கொண்ட மனிதர்கள் வெற்றிலைக்குப் பதிலாக மணத்தக்காளி இலையைப் பறித்து வைத்திருக்குமோ என்று அதை நன்றாகக்கவனித்துப்பார்த்த பின்னரே எடுத்துக்கொண்டுபோவார்கள். இந்தம்மாளின் மாதுர்யமான பதார்த்தங்களைப் புசித்த மனிதர்களெல்லாரும் ஒன்றுகூடி இந்தம்மாளுக்கு மணத்தக்காளி யம்மாள் என்ற பட்டப் பெயரையும் கொடுத்தார்கள். அன்று முதல் இவர்களுக்கு முறையே அழுமூஞ்சி அண்ணாவி, மணத்தக்காளி யம்மாள் என்ற பெயர் வழங்கி வருவதால் நாமும் அப்படியே குறிப்போம். அவர்களுக்கு வருமானமான வட்டிப்பணத்தையே வைத்துக்கொண்டு காலம் தள்ளி வந்தார்கள்.

இவர்களின் செல்வக்குமாரனான வரப்ரசாதி என்ற பையனோ தாய் தந்தையரைவிட அதிக புத்தி நுட்பமுடையவன். அவனை அவர்கள் வெகு செல்வமாக மணத்தக்காளிப் பதார்த்தங்களை யூட்டி வளர்த்தார்கள். பையனைப் பள்ளியில் சேர்த்தால் சம்பளம் கொடுக்க வேண்டுமே என்று வீட்டிலேயே வைத்துக்கொண்டார்கள். பையனுக்கு நல் விஷயத்தில் புத்தி செல்லாவிடினும், கோணல் வழியில்

வெகு திறமையாக வேலைசெய்யும் புத்தி வாய்த்திருந்தது. பெற்றோர்கள் பையனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயது சென்றபிறகு தர்ம பாடசாலையில் பிறரின் தூண்டுதலினால் சேர்த்தார்கள். பையன் காலையிலே பள்ளிக்குச் சென்றால் மாலையே வீடு திரும்புவான். எத்தனையோ அழகாய் அங்குள்ள பிள்ளைகளை ஏமாற்றி அவர்களிடமிருந்து காசைப் பரித்து பெப்பர்மின்ட்டு, பிஸ்கோட் முதலியவைகளை வாங்கித்தின்பதும்,விளையாடுவதும்,உபாத்தியாயருக்கு விசிறுவதுமாக இருப்பானேயன்றி ஓர் எழுத்துக்கூட அவன் எழுதுவது கிடையாது. உபாத்தியாயரும் இவனுடைய மூளைக்குப் படிப்பு ஏறாதென்றதையும் பெற்றோரின் குண விசேஷங்களையுமறிந்து இவனைத் தம் குற்றேவலிற்கே வைத்துக்கொண்டார். பையன் இம்மாதிரியே வெகுகாலம் தாய் தந்தையர் சேர்த்த வகுப்பைவிட்டு மாறாமல் அதிலேயே ஒழுங்காகப் படித்து வந்தான். பையனுக்கு வயது முதிர முதிரப் பலவிதத்தில் உலகானுபவத்திலெல்லாம் புத்தி விஸ்தரிக்க ஆரம்பித்துவிட்டது. பள்ளியில் படிக்கும் காலமெல்லாம் துள்ளி விளையாடிவிட்டுப் பிறகு பள்ளியறையின் நாட்டத்தினால் நாளடைவில் வைத்தியன் சிலரை மதனபள்ளிக்குச் செல்லும்படி உத்தரவிடுவது அனேகமாய் நாம் நேரிற்கண்ணால் பிரத்யக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். அதுபோல் நமது வரப்ரஸாதியும் படிப்பை அடியோடு கவனிக்காமல் முடிப்பவிழ்த்துத் திருடுவதும், முண்டை வீடு போவதும், துஷ்ட சகவாசம் செய்வதும்,கெட்ட வழியில் பிறருக்குத் துணையாகவிருப்பதுமான அபாரச் செய்கைகளிலெல்லாம் ஒரு நொடியில் பயின்றுவிட்டான். இவனது தாய் தந்தையர் எவ்வளவு செட்டாகவும் வயிற்றிற்கும் தின்னாமல் பண்ணைடைத்தனம் செய்கிறார்களோ அதற்கு நேர்விரோதமாகப் பையன் கடன் வாங்குவதும் துமாலாகத் தின்பதும், உடுப்பதும், வேசைக்கு வாரி யிரைப்பதுமாக விருந்தான். தன்னுடைய பெற்றோர்களின் தலையில் நிறைய மயிரிருப்பதனால், மூளை அதற்குள் மறைந்துவிட்டது என்று கருதியோ வேறு என்ன யோசனையாலோ பையன் தற்கால நாகரிகப்படி தலையை (கிராப்) கத்தரித்துக்கொண்டுவிட்டான். வரவர அவன் புத்தி அபரிமிதமாய்த் துன்மார்க்க வழியிலேயே செல்லலாயிற்று. பையன் இவ்விதம் துமாலாகச் செலவிடுவதைக் கண்டு மெத்த வருத்தப்பட்டு அவனைப் பயத்திலும் நயத்திலும் கட்டுப்படுத்திப் பார்த்

தார்கள். இவர்கள் பேச்சை அவன் சட்டைசெய்யாமல், ஐயன் பணத்தைப் பையன் கரைக்கும் வழியைப் பூர்ணமாய்த் தேடிவிட்டான். இவர்களுடைய குண விசேஷங்களும் பிரதாபமும் இங்ஙனமிருக்கக் கதையை இனித் தொடங்குவோம்.

மணத்தக்காளியம்மாள், எதிரில் உட்கார்ந்த மாதைக்கண்டு "சாப்பாடு ஆவதற்கென்ன? பையன்தான் காலை ஒன்பது மணிக்கெல்லாம் போஜனத்திற்கு வந்துவிடுகிறானே. அப்போதே நாங்களும்சாப்பிட்டாயிற்று." என்று ஒருமாதிரியாகக் கூறினாள். இதைக்கேட்ட சுண்டைக் காயம்மாள், "என்ன எல்லம்மா! ஒருவாறாகவிருக்கிறாயே? என்ன விசேஷம் முதலியாரெங்கே?" என்றாள்.

மணத்தக்காளி:—"விசேஷமென்ன விருக்கிறது? ஒன்றுமில்லை. நாங்கள் எவ்வளவோ கஷ்டங்கள்பட்டு வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி சேர்த்த பணத்தை யெல்லாம் அழிக்கப்பிறந்த பிள்ளையை நினைத்தால் தான் வருத்தமாகவிருக்கிறது. இவனுடைய நற்காலத்தை உத்தேசித்து அரும்பாடுபட்டுப் பணத்தைச் சேர்த்து இந்த மணத்தக்காளிச் செடியின் ஆதரவிலேயே நாங்கள் குடும்பம் நடத்துவது உங்களுக்குத் தெரியாதா? அதனால் எனக்குச் சிலர் மணத்தக்காளியம்மாள் என்றும் பெயர் வைத்திருக்கிறார்களாம். இவை யெல்லாம் வீண் வம்பல்லவா? நான் எதைச் செய்து தின்றால் என்ன ? என்னை ஏன் அப்படிக் கூற வேண்டும்" என்றாள். இதைக்கேட்ட சுண்டைக்காயம்மாள் பேசத் தொடங்கி " அடி பைத்தியக்காரி! வம்பளக்கிறவர்கள் சுபாவம் வெறுமனேயிருக்குமோ? அவர்களுக்குப்பொழுதுபோக்கு அதேதான்நீ என்ன ஒருவரைப்போல் வம்பு, தும்பு முதலியவற்றிற்குப் போகிறாயா ? என்னவோ உன் குடும்ப ஜீவனார்த்தத்திற்கு எதையோ செய்கிறாய். இதோ என்னைக்கூட சுண்டைக்காயம்மாள் என்று நாமமிட்டிருக்கிறார்களாம். நானும் உன்னைப்போலவே சுண்டைக்காய்ச் செடியைப் புழைக்கடையில் வைத்துப் பயிரிட்டு வருகிறேன். அதனால் என்னை யப்படிச் சொல்கிறார்களாம். அடே யப்பா! இந்தத் திருவல்லிக்கேணியில் சில பெண்பிள்ளைகளிருக்கிறார்கள். அவர்களைப் போல வம்புக்காரர்கள் இந்த ராஜதானியிலேயே கிடைக்கமாட்டார்கள். அவர்களுக்கு இந்த வம்பை விட்டால் வேறு வேலை கிடையாதென்றே நினைக்கிறேன். ஒவ்வொருத்தியும் பனைமரம் போல் வளர்ந்திருப்பது வம்பு பேசி

ஊரளப்பதற்கே யன்றி வேறில்லை. காலையில் பத்து மணி எப்போது அடிக்கப்போகிறது; வீட்டுப் புருஷன் எப்போது தொலையப்போகிறான் என்று காத்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வீட்டைவிட்டுப் போக வேண்டுவதுதான் தாமதம். தம்மை நன்றாக தளுக்கு மினுக்குச் செய்துகொண்டு சீமைக்கமல நகைகளைப்பூண்டு பட்டுப்புடவைகளையும் கட்டிக்கொண்டு அழகு பார்த்தவண்ணம் வீதியில் மீடிங்கு கூடித் திண்ணையில் ஏறி உட்கார்ந்துகொண்டு அக்கம்பக்கம் எத்தனை வீடுகள் குறுக்குச்சுவரின்றிச் சமமாக இருக்கின்றனவோ அத்தனை வீட்டுக்காரப் பெண்பிள்ளைகளும் உட்கார்ந்துகொண்டு ஊரைவளைத்து வம்பளக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். வீதியில் போகிறவர் வருகிறவர்களில் இவர்களுடைய பெண்கள் மகாநாட்டைக்கண்டு சிரித்துக்கொண்டு போகும் மனிதர்கள் எத்தனையோ பெயர்கள். அவர்கள் தம்முடைய யோக்யதையையும் தம்முடைய பவிஷையும் தம்மைப் பிறர் ஆண் பெண்பாலாகிய எல்லோரும் கைகொட்டிச் சிரித்து ஆற்றித் தூற்றுவதைச் சிறிதுமறியாமல், ஊரிலுள்ளவர்களை யெல்லாம் அவர்களப்படி. இவர்களிப்படி, அவர்கள் சொத்தல்; இவர்கள் புழுத்தல் என்று நாக்கை நீட்டி வம்புபேச முன்வந்துள்ள அவர்களின் பவிஷையறியாத அவர்கள் பிறரைச்சொல்வதிலேயே கங்கணங் கட்டிக்கொண்டிருப்பது வெகு அழகாக வில்லையா? அரசமரத்தைப் பிடித்த பிசாசு பிள்ளையாரைக்கூட பிடித்ததாம்'' என்று கூறுவார்கள். அதேபோல அவர்கள் கூட்டங்கூடி வம்புபேசுவதோடு விடாமல் அந்தத் தெருவழியே செல்லும் மற்றைய ஸ்திரீகளையும் தங்களது வம்பர் விநோத சபைக்கு மெம்பராகச் சேர்த்துக்கொள்வதற்காக வலுவி லழைத்து வம்பு பேச இழுப்பார்கள். சிறிய குழந்தைமுதல் கிழவர்வரையில் இவர்களுடைய பூர்வீகத்தையும் இவர்களுடைய நடத்தையையும் கூறி நகைக்கின்றார்களென்றால் நான் என்ன சொல்லப்போகின்றேன்? அந்த வம்பரின் கூட்டத்தை நம்பினவர்கள்கதி அதோகதிதான். அவர்களைச் சிறிதும் நம்பவே கூடாது. அவர்களுடைய அற்ப புத்தியும் ஈனத் தன்மையும் இவ்வளவு அவ்வளவன்று; எல்லோருக்கும் வாயில் பல்லிருக்கும் அவர்களுக்கு வயிற்றில்தான் பல்லிருக்கிறதாக நான் நினைக்கிறேன். வழியில் போகிறவர்களை அழைத்து

வெகு நல்லவர்கள்போல விசாரிப்பதும் பின்னுல் ஒரு மூட்டை அவர்களைத் தூஷிப்பதுமான அற்ப புத்தி யுடையவர்கள் சொல்வது ஒரு வார்த்தையா? சீமைக் கமல நகைகள்பூண்டு சரிகைக் கொட்டடிப் புடவை உடுத்தியதனுலேயே அவர்களுடைய நாற்றமெல்லாம் போய் விட்டதென்று நினைக்கிறுயா? பிறரை நாக்கை நீட்டி வம்பளக்க முன் வந்துள்ளவர்களிடத்தில் கெட்ட குணங்கள் அத்தனையும் சம்பூர்ணமாய் நிறைந்திருக்குமென்று நினைத்துக்கொள். எந்த வாயாடி வம்பியோ உன்னை மணத்தக்காளியம்மாள் என்றதனுல் உனக்கென்ன குறைவு வந்துவிட்டது. நீ அவர்களைப்போல் தின்றுவிட்டு தெருவில் உட்கார்ந்து கண்டபடி வம்பளந்து வாயாடி என்று பேர் வாங்கவில்லை. இன்னும் பலவிதமான அசங்கியப் பெயர்களைப் பெற்றுக்கொண்டு எல்லோரும் காரி துப்பிச் சிரிப்பதற்கும் பாத்திரமாகாமல் ஏதோ உன் குடும்ப போஷனுர்த்தமாகச் செடி வைத்துப் பாடுபடுகிறுய். அது எப்படி குறைவாகும்? ஒவ்வொரு குடும்பத்தில் எத்தனையோ விஷயங்களிருக்கும். அவைகளை யெல்லாம் பிறர் வம்புக்காக விட்டுவிடுவதற்காகுமா? அந்தக் கூட்டத்தார்களுக்குத் தினம் யாரைப் பற்றியாவது வம்பு பேசாவிடில் பொழுது போகாது. சுமங்கலியோ அமங்கலியோ எல்லாரும் அந்தக் கமிட்டியிற்கூடி பட்டுச் சேலையும் வெற்றிலைச் சாவியுமாக வம்பு பேசித்தான் அவர்கள் பொழுது போக வேண்டும். அதற்காக நீ ஏன் கவலைப்படவேண்டும். நான் அதைச் சட்டை செய்யவே இல்லை. சுண்டைக்காயம்மாளென்று சொன்னுல் சொல்லட்டும். என் குடும்பத்திற்காக நான் சுண்டைக்காயோ சுக்கங்காயோ எதையோ பயிரிடுகிறேன். இந்த வேலை நமக்குப் பொழுது போக்காகவு மிருக்கிறது. இதிலென்ன எச்சு? அவர்களைப்போலப் பல பேர்களையும் வம்பிற்கிழுத்து அவர்களிடம் பலமாதிரியான வார்த்தைகளை மூட்டை கட்டிக் கொள்ளவில்லையே! இதற்காக வருத்தப்படாதே. உன் பையன் விஷயமாய்ச் சொல்லியது வருத்தமாகத்தானிருக்கிறது. அவன் பிறந்தராசி அத்தகையது. வீட்டில்சேர்த்த பொருள்களை வாரியிறைக்க ஜெனித்தவன். இவற்றிற்கெல்லாம் கவலைப்படலாமா ? இன்னும் கொஞ்ச நாள் சென்றுல் சரியாய்விடுவான். இப்போது அறியாத் தன்மையால் இவ்வாறிருக்கிறுன். என்ன செய்வது, கவலைப்படாதே'' என்றுள்.

இதைக்கேட்ட மணத்தக்காளியம்மாள் "அம்மா நீங்கள் சொல்லியவைகளெல்லாம் சரியான விஷயங்கள். இன்னும் சிலபேர்கள் கூட அந்த வம்புக்காரர்களைப்பற்றி என்னிடம் எவ்வளவோ விஷயங்கள் சொன்னார்கள். அவர்களுடைய பவிஷு அவர்களுக்குத் தெரிந்தால் பிறரை வீணாக நாக்கை வளைத்துச் சொல்வார்களா? தம்முடைய நாற்றம் மறையும் பொருட்டுப் பிறரைச் சொல்லி தம்மைத் தேற்றிக்கொள்கிறார்கள்போல விருக்கிறது. இதனால் அவர்களுடைய மணம் இன்னும் அதிகமாகவே வீசுகிறதேயன்றிச் சிறிதும் குறையவில்லை. அவர்கள் தொழிலே அதுதான்" என்று சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அழுமூஞ்சி அண்ணாவி வந்துவிட்டார். உடனே சுண்டைக்காயம்மாள் எழுந்து "அம்மா! நான்போய் வருகிறேன்; ஏதோ காரியமாக வந்தேன்; அவர் வந்துவிட்டார் பிறகு வருகிறேன்" என்று கூறியவண்ணம் போய்விட்டாள்.

உள்ளே வந்த அண்ணாவி முதலியார் ஓர் ஆசனத்திலமர்ந்தார். உடனே மணத்தக்காளி யம்மாள் பேசத் தொடங்கி "என்ன பையன் வரவில்லையா? என்ன சொன்னான்?" என்றாள். இதைக்கேட்ட முதலியார் "சொல்வதென்ன விருக்கிறது? அவன் பிடித்ததையே சாதிக்கவேண்டுமாம். அந்தப் பத்மவல்லியைத் தனக்கு மணம்புரிவிக்க ஏற்பாடு செய்தாலன்றி அவன் மனம் நிம்மதியடையாதாம். அதற்கு வழி தேடினால் தேவடியாள் வீட்டைவிட்டு விடுவானாம். இது ஆகும் காரியமா? பத்மவல்லியின் பெற்றோர்கள் தமது குமாரன் சரியானபடி நடக்கவில்லை என்றே அவனை விட்டுவிட்டு இருக்கிறார்களே! நம்முடைய பையன் யோக்யதை தெரிந்து அவனுக்கு அவர்கள் பெண்ணைக் கொடுப்பார்களா?

மணத்தக்காளி:—கொடுப்பார்களா என்றால் என்ன செய்வது? உங்கள் தங்கையிடம் தாங்கள் கூறினால் தன் பெண்ணைக் கொடுகக மறுத்துவிடுவாளா அதையும் கேட்டுப் பாருங்கள். அப்படி மாட்டேனென்று கூறிவிட்டால் பிறகு பார்ப்போம்.

அண்ணாவி:—உனக்கென்ன பைத்தியமா? அவர்களுடைய மேன்மை என்ன! நம் பையனின் புத்தி என்ன! இதையறிந்து நான் எப்படி கேட்பேன். என்னுடைய—நம்முடைய—ஆதிகாலத்தை எல்லாம் வீணாக்கியதை எண்ணும் இப்போது வருத்தம் தெரிகின்றது.

எல்லோரையும்போல் படிக்காமல் பாழாய்விட்டோமே என்று என் மனம் வருந்துகின்றது. நாம் கெட்டதுபோலவே பையனும் படிப்பிலும் இன்னும் மற்ற எல்லா விஷயத்திலும் கெட்டு குட்டிச்சுவராய் விட்டானே. இதற்கென்ன செய்வது. நம்முடைய பையன் இவ்வளவு அழகாயிருக்கும்போது நாம் அவர்களை எப்படிக் கேட்பது.

மணத்தக்காளி:—தாங்களிப்படிச் சொல்லிவிட்டால் பிறகுஎன்ன செய்வது? நாம் எவ்வளவோ அரும்பாடுபட்டுப் பெற்ற பிள்ளையின் மனதை நோகவைப்பது நலமாகுமா? எப்படியானாலும் இதற்குத் தந்திரம் செய்தேதான் தீரவேண்டும்" என்று சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், வரப்ரசாதி அவ்விடம் தோன்றினான். மகனைக் கண்டவுடன் இருவரும் ஆநந்தத்துடன் எழுந்து மகனருகில் சென்று, "வாடா என் கண்ணே உன்னைப்பற்றித்தான் பேசிக்கொண்டே இருக்கிறோம். நீஅந்தப் பத்மவல்லியையே மணம் புரியவேண்டுமெனப் பிடிவாதம் செய்கிறாயே! அந்த ராங்கிக்காரர்கள் நம்மை லக்ஷியம் செய்து கொடுப்பார்களா? அவர்களுடைய சம்பந்தத்தை நாம் நாடுவது பலிக்குமா?" என்றாள். இதற்குள் வரப்ரஸாதி அங்கு போடப்பட்டிருந்த விசுப் பலகைமீது அமர்ந்து தன் பெற்றோரை நோக்கி "அம்மா! அப்பா என்றிருந்தால் இப்படித் தான் இருப்பார்களோ! எனக்கு இஷ்டமான வளைத் தேடி மணம் செய்விக்காமல் உங்கள் போக்காகச் சும்மாவிருந்தால் நானும் என் போக்கே போகிறேன். நான் ஆதி முதலிலிருந்து உங்கள் காசை அதிகச் செலவு செய்யலாகாதென்று எண்ணியே உங்களுக்குப் பணத்தையெல்லாம் மிகுதியாக்கிவிட்டு நான் பள்ளியில் முதலில் சேர்ந்த வகுப்பிலேயே வெகுகாலமிருந்தேன். உங்களுக்காக வாத்தியாருக்கும் பணிவிடை செய்து பசங்களுக்குப் புத்தக மூட்டை தூக்கி அதில் கால் அரைக்காசு சம்பாதித்தேன். நான் இவ்விதமெல்லாம் உங்களிஷ்டப்படி இருந்துவருகையில் நீங்கள் எனக்கு அந்தப் பெண்ணைக் கட்டிவைப்பது ஒரு பெரிய காரியமா? அவர்கள் எப்படி கொடுக்க முடியாதென்று கூறுவார்களோ பார்ப்போமே! அப்படிமுடியாதென்று அவர்கள் சொல்வார்கள் போல் தோன்றினால் அவர்களுக்குத் தெரியாமலே அந்தப் பெண் கழுத்தில் தாலி ஏறும்படியான வழியை நாம் உடனே தேடவேண்டும். தாலியைக் கட்டிவிட்டால் பிறகு அவர்கள் என்ன செய்யக்

கூடும். அவள் என் பெண்ஜாதியாக ஆனபிறகு மற்ற யாரும் அவளைக் சட்டமாட்டார்கள், ஆகையால் அதற்கு வழி தேடும்பொருட்டே நான் இங்குவந்தேன்'' என்றான்.

இதைக்கேட்ட இருவரும் சந்தோஷத்துடன் "அப்பா என் மகனே உன்னுடைய புத்தியின் விசேஷமே விசேஷம்! நீ என்ன கெட்டிக்காரனாய் விட்டாயடா! உன்னைப்பெற்ற எங்களைவிட நீ பன்மடங்கு அதிக புத்திசாலியாகவல்லவா ஆய்விட்டாய்! உனக்கு இத்தகைய புத்தி எங்கிருந்து வந்ததடா? உனக்கு எப்படிச் செய்யலாமெனத் தோன்றுகின்றதோ அவ்விதமே செய். அதற்கு எங்களுக்கு ஆக்ஷேபனை இல்லை. உனக்கே அதற்கும் வழி தோன்றும். அதைத் தெரிவித்தால் அப்படியே செய்துவிடுவோம்'' என்றார்கள்.

இதைக் கேட்ட வரப்ரஸாதி பெரிதும் மகிழ்ந்தவனாய், தன் தாயை நோக்கி, "அம்மா! அவளைத் தந்திரமாய் மணஞ் செய்யவேண்டுமேயன்றிப் பகிரங்கமாக முடியாது. எவ்விதமாயினும் தாலியைக் கட்டிவிட்டால், பிறகு அவளை அசைக்கக்கூடுமா? அது ஒருநாளும் ஆகாத காரியம். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் நாம் அவர்களுக்குத் தெரியாமல் ஒரு புரோகிதரை அழைத்து நாள் முதலிய எல்லாம் பார்த்துக் கொடுக்கச் செய்துவிடுவோம். பிறகு மந்திரமில்லாமல் தாலி கட்டினால் அந்தக் கலியாணம் ஒருகால் ரத்து செய்துவிட இடங் கொடுக்கும். அதற்காகப் புரோகிதரை விவாகத்திற்குரிய மந்திரத்தை எல்லாம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொடுத்துவிடச் சொல்கிறேன். அதை நான் கையில் எடுத்துக்கொண்டுபோய் அந்தப் புத்தகத்திலிருப்பவைகளெல்லாம் ஒரு முறை படித்துவிடுகிறேன். மந்திரலோபமில்லாமல் போய்விடும். அக்னி வளர்ப்பதற்கு என்ன செய்வேன் தெரியுமா? ஒரு கட்டு சுருட்டும் வத்திக்குச்சியும் என் பையில் எடுத்துச் செல்வேன். நான் மந்திரத்தை மெல்லப் படிக்கும்போது அந்தச் சுருட்டைப்பற்ற வைத்துவிடுகிறேன். அதே அக்னியாய்விட்டது. இன்னும் வேறு என்னவேண்டும்? தாலியைக் கட்டும்போது நானே 'கௌரி கலியாணமே லக்ஷ்மி கலியாணமே! என்று பாடிவிடுகிறேன்! சரிதானே! இனி ஒன்றும் பாக்கி இல்லையே! ஓ! மேளம் ஒன்று பாக்கி எனலாம். அதையும் வைத்துவிடலாம். வைத்தால் பெரிய சந்

தடிசெய்து எல்லோரையும் எழுப்பிக் காரியத்தையே கெடுத்துவிடும் ஆகையால் பிறகு மேளதாளம் வைத்துச் செய்துகொள்ளலாம். ஆகையால், நாம் இப்போது முதலில் புரோகிதரையழைத்து நாள் பார்க்கச் சொல்லவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என்றான். தமது புதல்வன் இவ்வளவு புத்திசாலித்தனமாகப் பேசியதைக்கேட்ட மணத்தக்காளியம்மாளுக் குண்டான சந்தோஷம் இவ்வளவ்வளவல்ல. உடனே பல்லிளித்த வண்ணம் மகனை நோக்கி, "அடே என் கண்ணே! இப்பேர்ப்பட்ட புத்திரன் வேண்டுமென்று தவம் செய்தோம். ஈசன் உன்னை அளித்தார். உன் புத்திதான் என்ன அபாரமாயிருக்கின்றது. அதைப் பார்க்கப்பார்க்க எனக்குப் பொங்கும் ஆநந்தம் சொல்ல முடியவில்லை. உனக்கு எப்படியடா இத்தகைய யோசனையும் புத்தியும் வந்தன? பேஷ்! நீ சொல்லியவையெல்லாம் வெகு அழகாயிருக்கின்றன. அப்படியே செய்துவிடுவோம் ஆனால் இன்னொன்று. அவளுக்கு ஏதாவது நகை முதலியவை டம்பத்திற்காகவாவது போட்டால்தானே நன்றாயிருக்கும். நாம் அதற்கு என்ன செய்வது? பணத்தை எடுத்தால் செலவழிந்துவிடும். அதற்கு ஒரு யோசனை சொல். அவ்விதமே செய்துவிடுவோம்" என்றாள்.

வரப்ரசாதி:—அம்மா! அதுதானா பெரிய கஷ்டம்? அதைப்பற்றிப் பயப்படவேண்டாம். அதற்கு எவ்விதமாவது வழிதேடிவிடுகிறேன். நீ சென்று முன்னால் புரோகிதரை அழைத்துக்கொண்டு வந்துவிடு" என்றான். உடனே தாயார் எழுந்து வீதியில் ஓடினாள். எதிரே பூனை வந்தது. அதைத் தாண்டிக்கொண்டு தெருவிலிறங்கினாள். ஒற்றைப் பார்ப்பான் எதிரே வந்தான். அதையும் தாண்டி அடித்துக்கொண்டு புரோகிதர் வீட்டையடைந்தாள். அங்கு புரோகிதர் ரோகிதராகப் படுத்திருந்தார். நமது மணத்தக்காளியம்மாள் அவரருகில்சென்று நகைத்துக்கொண்டே "சுவாமி! தாங்கள் சற்று நமது கிருகத்திற்கு எழுந்தருளவேண்டும். ஒரு முக்கியமான காரியமிருக்கிறது. தயைசெய்து வரவேண்டும்" என்றாள். இதைக்கேட்ட புரோகிதருக்கு அவ்வளவாக உற்சாகம் உண்டாகவில்லை. ஏனெனில் இவர்கள் வீட்டிற்குச் சென்றால் வரும்படி அதிகமாகக கிடைக்காது. மணத்தக்காளிக் காய் பதார்த்தந்தான் கிடைக்கும்.

ஆதலால் அவர் உற்சாகமில்லாமலிருந்தார். அந்தம்மாளால் தமக்கு ஏதாவது கிடைப்பதாயிருந்தால் அவர் நோயிருந்தாலும் கொடியிருந்தாலும் ஓட்டமெடுத்து அவர் வீட்டையடைவார். மேலும் புரோகிதர்களில் பெரும்பாலோர் தமது கையில் பணம் நிறைவதையே நோக்கிக் கணக்கெண்ணிக் கொண்டு மந்திரம் சொல்வதுபோல் அபிநயித்து விவாகப் பந்தலில் உட்கார்ந்திருக்கிறார்களேயன்றி உண்மையான மந்திரத்தைச் சொல்வதற்கே யவர்களுக்குத் தெரியாது. பெரிய ஓமத்தை வளர்த்து அதனருகில் உட்கார்ந்து நெய்விட்டு ஆஹுதி பண்ணுகிறார்களே அதற்குச் சில புரோகிதர்கள் தமக்குப் பணம் வருவதன் மேலேயே கருத்தாயிருந்தபடி மந்திரம் சொல்வார்கள். அதாவது தனுறு, எஸ்வாஹா அஸ்தம் நிறைய, எஸ்வாஹா, சேரவேணும் எஸ்வாஹா, என்று ஆஹுதி செய்கிற வாத்யார் நம்பரில் இவர் முதல்தரமானவர், தனுறு. எஸ்வாஹா. என்றால் அந்தக்கல்யாண வைபவத்தில் கவனிப்பார்கள் யாவர்? அதிலும் பிராம்மணரல்லாதார் வீட்டில் முதலே எதையும் கவனிக்கப் போவதில்லை. தனம் கை நிறையச் சேரவேண்டும் என்றதை மந்திரமாகக் கூறி அங்குள்ள நெய்யை எல்லாம் அக்கினியில் சேர்த்துவிட்டுத் தனத்தைப் பெற்றுக்கொண்டு போகிறவரான புரோகிதருக்கு இவர்கள் வீட்டு சங்கதி தெரிந்திருக்கிறது.பணமில்லாமல் பாதம் கிளம்புமா? பணத்தைத் தட்டோடு வைத்தால் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஜாதகம் முற்றும் பேதகமாக விருந்தாலுங்கூட அதை வெகு ஸாதகமாகவே கூறிப் புகழ்ந்து அவர்களிடமிருந்து தக்க வெகு மானம் பெற்றுக்கொண்டு பாதகமூட்டையைக் கட்டிக்கொண்டு சென்றுவிடுவார்கள். பணமில்லாமல் பார்க்கச் சொல்லும் ஜாதகம் வெகு பொருத்தமாக விருந்தாலும் அதை அடியோடு பொருத்தமில்லை என்று கூறி விவாகத்திற்குத் தடைசெய்து விடுவார். அத்தகைய புரோகிதர் இப்போது ரோகிதராகப் படுத்துமிருக்கிறார். பணமோ கால்தம்பிடி வராது. மணத்தக்காளி வற்றல் ஒரு கை கொடுப்பாளோ அதுவும் சந்தேகந்தானே அத்தகைய நிலைமையுள்ள வீட்டிற்குத் நாம் எவ்விதம் போவது என்ற யோசனையிலாழ்ந்து புரோகிதர் பதில் கூறுதிருந்துவிட்டார். இதற்குள் மணத்தக்காளியம்மாள் பேசத்தொடங்கி, "ஸ்வாமி! என்ன பேசாதிருக்கிறீர்களே! எழுந்திருங்கள். இது ஓர் அவசரமான வேலை

தங்கள் விஷயம் எனக்குத் தெரியும். இது கல்யாண விஷயமல்லவா? ஒரு கையோ அல்லது பையோதான் கொடுப்பேன். எழுந்திருங்கள்'' என்றாள்.

புரோகிதர்:—அம்மா! எனக்கு தேக அசௌக்கியம். ஆகையால் என்னால் வரமுடியாதே. தாங்கள் இன்னும் யாரையாவது பாருங்கள்''

மணத்தக்காளி:—அப்படியல்ல வழக்கமாயுள்ளவர் தான் வர வேண்டும். தயவுசெய்யவேண்டும்'' என்று வெகுதூரம் கெஞ்சியதின் பேரில் புரோகிதர் ஒருகால் இது கல்யாண விஷயமாயிற்றே; பணம் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற எண்ணத்தோடு மெல்லக் கிளம்பினார்; ''அம்மா! என்னால் நடக்கமுடியாது வண்டிகொண்டு வாருங்கள்'' என்றார். மணத்தக்காளியம்மாள் வீதிப்புறம் ஓடிவண்டியொன்று அமர்த்திக்கொண்டு வந்தாள். பின் இருவரும் வண்டியிலமர்ந்து வீடு திரும்பினார்கள். வீட்டுவாயிலில் இருவரும் இறங்கினார்கள். புரோகிதர் முன்னால் வீட்டிற்குள் சென்றார். பிறகு மணத்தக்காளியம்மாள் வண்டிக்காரனுக்கு ''அந்த ஐயா திரும்ப வீட்டுக்கு இதே வண்டியில்தான் செல்வார். அப்போது பணம் கொடுத்துவிடுவார்! ஆகையால் அங்குச் சென்ற பிறகு பணம் கேட்டு வாங்கிக்கொள்'' என்று கூறிவிட்டுத் தானும் உள்ளே சென்றாள். புரோகிதரும் தாயாரும் வருவதைக்கண்ட மகன் மட்டற்ற மகிழ்ச்சியைபடைந்து பூரித்துவிட்டான். புரோகிதரை ஓராசனத்தில் அமரச் செய்து பின் அவரைப் பணிந்து ''நமது பையன் வரப்ரஸாதிக்குக் கல்யாண முகூர்த்தம் பார்க்கவேண்டும். காலம் இரவு வேளையாகவிருக்கவேண்டும். நல்ல முகூர்த்தம் பார்த்துக் கொடுங்கள்'' என்றாள். அதற்குப் புரோகிதர் இரவு காலத்தில் ஏன்? பகலில் அல்லவா விவாகம் செய்வார்கள்?

மணத்த:—விவாகம் யாருக்கும் தெரியாமல் இரகஸியமாய் நடக்க வேண்டும். பகலில் செய்தால் ஜனக்கும்பல் நிறைந்து விடுவார்கள். ஆகையால் இரவில் பாருங்கள்'' என்றாள். உடனே ஏதோ கணக்குகள் போட்டுப் பெண்ணின் ஜாதகம் பிள்ளையின் ஜாதகம் வேண்டுமே'' என்றார்.

மணத்:—அவையெல்லாம் வேண்டாம்; நாள் பார்த்தால்போதும்'' என்றாள்.

உடனே புரோகிதர் ஒரு நாளைப் பார்த்துக் கொடுத்தார். அதாவது, "வெள்ளிக்கிழமை இரவு 10-மணி முதல் 5-மணி வரையில் நல்ல வேளையாகவே இருக்கிறது. அந்த முகூர்த்தத்தில் நடத்திவிடலாம்" என்றார். உடனே வரப்ரசாதி சந்தோஷத்தோடு "சரி அம்மா! அதையும் சொல்லிவிடு" என்றான். தந்திரக்காரர்களான தாய் தந்தையர் "ஸ்வாமி! தங்களுக்கோ உடம்பு சரியாக வில்லை. அன்று இன்னும் எப்படி இருக்குமோ? ஆதலால் இன்றே மந்திரத்தை எல்லாம் ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொடுத்துவிடும். நாங்களே பார்த்துப்படித்து விடுகிறோம். அடே பையா! அந்தப் பெட்டியைத் திறந்து பையை எடுத்துவா" என்றார்கள்.

இதைக்கேட்ட புரோகிதர் பணம்என்ற பேயினுல் பிடிக்கப்பட்டவராய் அவ்வாறே ஒத்துக்கொணடு சில மந்திரங்களைப் புத்தகத்தில் எழுதிவிட்டார். அதை வாங்கிக்கொண்ட மணத்தக்காளியம்மாள் "ஸ்வாமீ! இன்னொரு சந்தேகம்; அதை நிவர்த்திக்க வேண்டும். அதாவது:—நான் தங்களை அழைக்கவந்தபோது எதிரே முதலில் பூனை குறுக்கே வந்தது; பிறகு ஒற்றைப் பார்ப்பான் எதிரே வந்தான. இவைகளெல்லாம் சகுனத்தடை என்பார்கள். ஆகையால் தாங்கள் இதற்குப் பரிகாரமேதேனுமிருந்தால் சொல்லுங்கள். அதைச் செய்துவிட்டு விவாகத்திற்கு ஆரம்பம் செய்வோம்" என்றாள். புரோகிதர் சாந்தி செய்வதால் தமக்குலாபம் கிடைக்கும் பக்ஷத்தில் ப்ரபலமாகச்சொல்லுவார். இங்கு எதுவும்கிடைக்காதென்பதைத்திட்டமாயறிந்தவராதலால் கேட்டதும் சிரித்த வண்ணம், "அம்மா! இந்தச் சகுனங்கள் வெகு நல்ல சகுனங்கள். தாங்கள் விவாகத்தை யாருக்கும் தெரியாமல் பூனை போல் இரகஸியமாகச் செய்யப்போவதால் அதற்கு முதல் சகுனம் பூனையே எதிரே வந்தது. ஒற்றைப் பார்ப்பான் வந்ததும் நல்ல சகுனமே. எப்படியெனில் பிராமணர்கள் ப்ரம்ம குலத்தைச் சார்ந்தவர்கள் அவர் எதிரே வந்தால் ப்ரம்மாவின் அருளால் தங்களுக்குக் கூடிய சீக்கிரம் அடுத்த ஆண்டிற்குள் பேரன் பேத்திகள் பிறந்துவிடுமென்பதே. இதற்காகவே பார்ப்பான் வந்தான். இதற்கு சாந்தியும் வேண்டாம்; சீமந்தமும் வேண்டாம்; நான் போய் வருகிறேன்" என்றார்.

உடனே மணத்தக்காளியம்மாள் தட்டில் வெற்றிலை பாக்கும், ஒரு பையில் அரைக்கு மேலோடு மணத்தக்காளி வற்றலைக் கொட்டி

அதோடு சில தம்பிடி சில்லறைகளையும் போட்டு அதை வெகு டம்பமாக வண்டியிலேயே கொண்டுபோய் வைத்துவிட்டாள். புரோகிதர் காதில் கலகல வென்று பணம் சப்தம் விழும்படி உள்ளே பணத்தைக் கொட்டிப்பின் தன் பையில் போட்டுக்கொண்டாள். புரோகிதர் பணம் வந்து விட்டதாக மகிழ்ந்து உத்தரவு பெற்றுக்கொண்டு வண்டியண்டை போனுர். வண்டிக்காரனிடம் "ஐயா பணம்கொடுப்பார் வாங்கிக்கொள்" என்று முன்னமேயே எச்சரித்துவிட்டுப் புரோகிதரிடம் "வண்டிக் காரனிடம் நாங்கள் பணம்கொடுத்தாய்விட்டது. தங்களையும் ஒரு கால் கேட்டாலும் கேட்பான்; ஆகையால் தாங்கள் வீட்டுக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள சந்தின் மூலையிலேயே இறங்கி அவனுக்குத் தெரியாமல் புழைக்கடைப் பக்கமாய் வீட்டுக்குப் போய் விடுங்கள்" என்ருள். இதைக் கேட்டபோதே வண்டிக்காரனுக்குப் பணம் கொடுக்கவில்லை என்பதை யறிந்த புரோகிதர் பணத்திற்காகத் தம்மைப் பிடித்துக் கொள்ளப்போகிருனே என்று எண்ணி மணத்தக்காளி யம்மாள் உள்ளே சென்றதும் பையையும் தட்டையும் எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கலானுர். இவர் ஓடுவதைக்கண்ட வண்டியோட்டி தன் பணம் கிடைக்கவில்லையே என்று வண்டியோடு புரோகிதரைத் துரத்திக்கொண்டு போய்விட்டான்.

வரப்ரசாதி சந்தோஷத்துடன் "அம்மா! நான் சென்று சில நகைகளைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுவெளியே சென்ருன்.

சென்றவன் நேரே தனது ஆசை நாயகியாகிய நீலாமணி என்னும் தாசி வீட்டை யடைந்தான். இவன் அந்த வீட்டிற்கு அடிக்கடிப் பழக்கமாகப் போகிறவனுகையால் இவனைக் கண்டதும் வேலைக்காரன் "அம்மா வெளியே போயிருக்கின்ருர்கள்" என்ருன். அதற்கு வரப்ரசாதி சரி வரட்டும் என்று கூறி உள்ளே சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். உட்கார்ந்ததும் ஒரு யோசனை தோன்றியது. நீலாமணியை நாம் நேரில் கேட்டால் நகைகளைக் கொடுப்பாளென்று நிச்சயமாய் நம்ப இடமில்லை; ஆதலால் அவள் இல்லாத இந்தச் சமயமே அவள் பெட்டியைத் திறந்து சிலநகைகளை எடுத்து வைத்துக் கொண்டால் நலமாயிருக்கும். அவள் தானுகக்கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பார்த்துக்கொள்ளலாம்" என்று எண்ணி, நீலாமணியின்

சயன அறையின் பூட்டை மறுசாவியின் உதவியால் திறந்து உள்ளே சென்று அவளுடைய நகைப் பெட்டியையும் அவ்வாறே திறந்தான். அன்று நீலாமணி ஒருகல்யாண வீட்டுகச்சேரிக்காகச் சென்றிருந்ததால் அநேகமான நகைகளை யெல்லாம் தானே தரித்துக்கொண்டு போயிருந்தாள். மிச்சமான நகைகள் சில விருந்தன. அவைகளில் வைரத்தினால் செய்த சில நகைகளை எடுத்துக்கொண்டான். இன்னும் சிலவற்றை எடுத்துக் கொண்டேயிருக்கையில் முன் கட்டில் நீலாமணியின் குரல் கேட்டது. அதைக்கேட்ட அவன் பதறிப்பயந்து தான் எவ்வாறு தப்புவதென்று தெரியாமல் தவிக்கலானான். இச்சமயம் நீலாமணி கூடத்தைத் தாண்டி அறையின் சமீபத்தில் வந்து தனது சயன அறை திறந்திருப்பதைக் கண்டு அப்படியே அசைவற்றுப் பயந்து இன்னதென்று சொல்ல வியலாத விதமான கலக்கத்தோடும் பீதியோடும் "யாரோ கள்ளன் வந்து விட்டான்" என்று தீர்மானித்து 'திருடன், திருடன்" என்று பெரிய சத்தம் செய்தவண்ணம் நின்றுவிட்டாள். இந்தக் கூக்குரலைக்கேட்ட வரப்ரசாதி முற்றிலும் இடிந்துபோய்க் கையிலிருக்கும் ஆபரணத்தோடு அப்படியே இன்ன செய்வதென்று அறியாமல் ஆந்தையைப்போல் விழித்துக்கொண்டு மரமாய் நின்றுவிட்டான்.

4-வது அதிகாரம்

தீய்ந்த பயிரில் தீயும் பிடித்தது

கப்பல் காட்சியைக் கண்ணாரக் கண்டு களித்துவந்த காரிகையரிருவரும் ஏறிவந்த படகானது பலமான சாமான் ஏறிச்சென்ற படகால் மோதப்பட்டுச்சரேலெனக் கவிழ்ந்ததும்,படகிலிருந்த நால்வரும் தண்ணீரில் மூழ்கிவிட்டார்கள். அந்தோ பரிதாபம்,பரிதாபம்! அழகே உருவெடுத்து வந்தவள்போலுள்ள பத்மவல்லி தண்ணீரில்விழுந்ததும் ஆ! என்று ஓர் அலறு அலறியவண்ணம் தன் கையை நீட்டியபடி ஏதாவது பிடிப்பு கிடைக்குமோ என்று கையைத் தாவியவாறு தண்ணீரில் ஆழ்ந்துவிட்டாள். அந்தோ! அவள் மனதில் அப்போது இன்னதென்று விவரிக்க இயலாத துக்கம் வந்து மூண்டுவிட்டது. அவள் அந்தத் தண்ணீரிலிருந்து தவித்த சொற்ப நேரத்தில் அவள் மனதில் எண்ணரியபலவிதமான எண்ணங்கள் வந்து நிறைந்து வருத்தவாரம்பித்துவிட்டன. ''ஐயோ! நாம் ஓர் அருமையான அண்ணனுடன் பிறந்தும் அவனை நாம் உயிருள்ளபோதே துறந்து பிரிந்திருந்தோம். மறுமுறை கண்ணாரக் காண்பதற்கில்லாமல் உயிர் போகப் போகின்றதே! ஐயோ! புத்திரனின் விஷயமாக மனம் உடைந்து வருந்தும் பெற்றோரின் மனதை மகிழ்விக்காமல் நானும் அவர்களைத் தீராத விசனத்தில் ஆழ்த்திவிட்டுப் போகின்றேனே! ஆ! எனக்கு இத்தகைய அற்பாயுள் மரணமா நேரவேண்டும். அந்தோ! திணறுகின்றதே மூச்சு! வயிற்றில் தண்ணீர் நிரம்பி விட்டதே. ஆ! அம்மா! அப்பா! என் அருமை அண்ணா! பாவியேன் தங்களில் யாரையும் மகிழ்விக்காமல் என்றும் தீராத விசனத்தைத் தங்களுக்கு மூட்டிவிட்டுச் செல்கிறேனே. அண்ணா! இனியாகிலும் நீ நல்ல புத்தியுடன் இருந்து பெற்றோரைப் பாதுகாக்கமாட்டாயா? ஈசா! அத்தகைய புத்தியை அவனுக்களிக்க நீ ஏன் பாராமுகமாக இருக்கவேண்டும்? இந்திரா! என்னோடு கூடக் கப்பல் காட்சியைக் காணவந்த உனக்கும் என்னால் மரணம் ஏற்பட்டுவிட்ட பாவத்தை நான் எப்படி தீர்த்துக்கொள்வேன்? அந்தோ! உன்னருமைக் காதலனையும் பெற்றோரையும் விட்டு நீயும் மாண்டு விடுகிறாயே! ஐயோ! எனக்கு ஒன்றுமே

தெரியவில்லையே. பிராணன் தவிக்கின்றதே! வயிறு வெடித்து விடும் போல் இருக்கிறதே! மேலுக்குக் கிளப்புவது போல விருக்கின்றது. மறுபடியும் உள்ளே ஆழ்த்திவிடுகின்றதே. என்னசெய்வேன்? ஏ பரம் பொருளே! நான் பூர்வஜன்மத்தில் என்ன அநியாயம் செய்து யாரைத் தண்ணீரில் தள்ளி வேடிக்கை பார்த்தேனோ? இந்த ஜன்மத்தில் இவ் விதம் திணறி அல்பாயுளாக உயிர் துறக்கின்றேன். இந்த ஜன்மத் தில் நான் என்ன பாவ க்ருத்யங்கள் செய்திருந்தபோதிலும் அவைகளை யெல்லாம் க்ஷமித்து என்னை உன்னடிக்குச் சேர்த்துக்கொள்ள வேண் டும். அப்பனே! சர்வேச்வரா! என்ன செய்வேன்? தவிக்கின் றதே உயிர். திணருகின்றதே மூச்சு. என்னவோ செய்கின்றதே! என்னால் எதையும் சகிக்க முடியவில்லையே! என்னை வருத்தாமல் உன்னடியில் சேர்த்துக் கொள்ளலாகாதா! ஐயோ ராமா! க்ருஷ்ணா! கோவிந்தா! ஆ! ஆ! ஆ! என்று ஒரு நிமிடத்திற்குள் பற்பல எண் ணங்களையும் எண்ணிக் கண்ணீர்விட்டு மனம் புண்ணாகித் திக்கு முக் காடித் திணறி வயிறு நிறைய உப்பு ஜலத்தைக் குடித்துவிட்டத னால் உடனே அவளுக்குப் பிரக்ஞை போய்விட்டது. இரண்டு தரம் மூழ்கியாய்விட்டது. இதை எழுதவும் படிக்கவும் நேரமாகிறதே யன்றி மனதில் இவ்வெண்ணங்கள் ஒரு நொடியில் உண்டாயின. அந்த விடம் அலைகளின்றிக் குளம்போலிருந்தபடியால் மூழ்கி எழுந்து இளம் பியவண்ணம் தவிக்கின்றாள். இந்திராணியும் அதேபோல் தன் பிரா ணபதியையும் பெற்றோரையும் விட்டுப்பிரிந்து போவதை எண்ணி வருத்தம் தாங்காமல் மயங்கிவிட்டாள். வண்டியோட்டியோ "எஜமானி யம்மாள் கடலில் விழுந்துவிட்டாள். உயிர் போய்விட்டால் நான் மாத் திரம் பிழைத்து என் எஜமானனுக்கு என்ன பதில் சொல்வது? ஆகை யால் நானும் இறந்துவிடுவதே மேல்" என்றெண்ணிப் பின் நீந்தி எழுந்து பத்மத்தைப் பார்ப்போம். அகப்பட்டால் சரி; இல்லையேல் நாமும் உயிரை விட்டுவிடுவோம்" என்று தீர்மானித்துக்கொண்டே விழுந்த க்ஷணத்திலேயே நீந்தித் தன் கைக்கு எட்டியவரையில் துளாவ ஆரம்பித்தான். படகோட்டியும் மிகுந்த பயத்தோடு நீந்தி மடந்தையரைத் தேடலானான்.

இதற்குள் கப்பலிலிருந்து திரும்பும் ஒரு படகு அதி விசை யாக வந்துகொண்டே இருந்தது. நமது ஆரணங்குகள் ஏறிச்சென்ற

18281

படகு எந்தப்பக்கம் கவிழ்ந்ததோ அதே பக்கம் கப்பலிலிருந்து திரும்பிய படகும் வந்தது. அந்தப் படகு இவர்களது படகு கவிழ்ந்த போதே புறப்பட்டதாகையால் அதற்கும் இதற்கும் இடையில் சுமார் பத்தடி தூரமிருந்தது. ஆகையால் அந்தப்படகு புறப்பட்டவுடன் இது கவிழ்ந்ததை அந்தப் படகிலிருந்தவர் பார்த்துக்கொண்டே இருந்தமையால் தமது படகை அதிக விரைவில் விடச் செய்தார். இதற்குள் இந்தப் படகு கவிழ்ந்ததும் அங்கு இன்னும் போய்க்கொண்டிருந்த படகிலுள்ள மனிதர்களெல்லாம் "ஐயோ கவிழ்ந்துவிட்டதே படகு! நல்ல அழகு வாய்ந்த பெண்மணிகள் எடுப்பாரற்றுப் போகின்றார்களே" என்ற உபசார வார்த்தைகளைக் கூறுகிறார்களேயன்றி இறங்கி உபகாரம் செய்ய முன்வந்தவர்கள் யாவருமில்லை. ஓவென்று கூச்சற்போட்டுச் சத்தம் செய்கிறார்கள். கவிழ்ந்த படகோட்டி மெல்ல நீந்திக் கவிழ்ந்த படகை எடுத்து நிமிர்த்துவதைக் கவனிக்கலானான். வண்டியோட்டி வேதாசலம் தன்னாலானமட்டும் ஒருகை பார்த்துவிடுவோம் என்று நீந்தியபடி அவர்களைத் தூக்க முயன்றுகொண்டே இருக்கிறான். இதற்குள் கப்பலிலிருந்து வந்த படகும் சமீபித்துவிட்டது. அதில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதர் திடீரென்று தன்னுயிரைத் திரணமாக மதித்து ஜீவகாருண்யத்தையே எண்ணித் தண்ணீரில் குதித்துவிட்டார். அவர் மனதில் இந்தப்படகு கவிழ்ந்ததைப் பார்த்ததுமுதல் "ஐயோ! அநியாயமாக யாரோ இந்தக் கடலில் உயிர் துறக்கும் படியாய் நேர்ந்துவிட்டதே! யாரோ எவர்களோ தெரியவில்லையே! அநியாய மரணமாய்ப் போவதற்குமுன் நம்மால் ஏதாவது உதவிபுரிந்து அவர்களை வெளியில் எடுத்துக் காப்பாற்ற முடியுமோ? இந்தப் படகு போய்ச் சேருவதற்குள் அவர்களின் உயிர் போய் விடுமோ? உயிர் போய்விட்டபின் நம் உதவியால் யாது பயனுண்டு? படகும் எவ்வளவு வேகமாய் ஓட்டினாலும் என் மனோவேகத்திற்குச் சரியாகச் செல்லவில்லையே?" என்று கவலையும் பரிதாபமும் கொண்டு வருந்துகையில் படகும் அருகில் வந்தது. உடனே அவர் தண்ணீரில் குதித்து தண்ணீரோடு மல்யுத்தம் செய்து கடலில் ஆழ்ந்த காரிகையர்களைத் தேடினார். இவர்க்கைக்கு ஏதுவும் எட்டவில்லையாதலால் அவருக்கு மனதில் ஒருவித வெறுப்பும் கலவரமும் தோன்றி வதைத்தன.

அதனால் அவர் ஐயோ அநியாயமாய்ப் போய்விட்டார்களே என்ற பரிதாபங்கொண்டு ஒரு நிமிஷ நேரத்தை ஒரு வருஷ நேரமாய்க்கழித்தார். அப்படியும் அவர் சௌரியத்தையும் முயற்சியையும் விடாமல் தேடியதில் அவர் கையில் ஏதோதட்டுபட்டது. உடனே அவர் அதைப் பலமாகப் பிடித்து இழுத்தார். அந்த விசையில் அது அவரையும் உள்ளே இழுக்கவாரம்பித்தது. அவர் மெல்ல சமாளித்துகொண்டு இழுத்தார். அவர் கையில் பிடிப்பட்டிருந்த வஸ்து மேலுக்குக் கிளம்பியது. உடனே அவர் மட்டற்ற மகிழ்ச்சியோடு தன் கையில் பிடிப்பட்டிருந்த தலை மயிரை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பார்த்தபோது அங்கு விழுந்திருப்பது ஒரு பெண் பாவை என்பதை யறிந்து கொண்டார். உடனே அவர் அன்னிய ஸ்திரியை எவ்வாறு தீண்டி எடுப்பது என்று யோசித்தார்; இதற்குள் மீண்டும் சீச்சீ ஆபத்தான இச்சமயத்தில் இவைகளையெல்லாம் பார்த்தால் அநியாயமாய் ஒரு மாதின் உயிர் போய்விடுமே; இப்போதே உயிர் இருக்கின்றதோ இல்லையோ சந்தேகமாகவிருக்கிறது. நாம் ஜீவகாருண்யத்தினால் எடுக்க முன் வந்ததில் தப்பிதம் யாது? கெட்ட நினைவோடு தீண்டினால் பாவமேயொழிய ஆபத்திற்குப் பாபமில்லை. இச்சமயம் சும்மா இருக்கலாகாதென்று இமைப்பொழுதிற்குள் இந்த யோசனை எல்லாம் செய்துகொண்டு உடனே தம்முடைய கையில் பிடித்திருந்த கூந்தலை விட்டுவிட்டு அந்தப் பாவையை மெல்லத் தூக்கிப் பிரயாசைப்பட்டுப் படகில் போட்டார். இதற்குள் வேதாசலம் ஒரு மடந்தையைத் தூக்கிவிட்டான். உபகாரம் புரியவந்த மனிதர் இன்னும் யாராவது விழுந்துவிட்டார்களா என்று வண்டியோட்டியைக் கேட்டார். அவன் இல்லை என்று கூறிப் பெருமகிழ்ச்சியுடன் அநேக உபசார வார்த்தைகள் சொல்லி, 'ஐயா! தங்களால் தான் எங்கள் எஜமான் குடும்பம் பிழைத்தது. தாங்கள் எடுத்தவர்கள் தான் எங்களெஜமானியம்மாள். இந்தம்மாள் அவர்களுடைய சிநேகிதை. இன்று எங்களுக்கு இத்தகைய ஆபத்துவேளையில் உதவிசெய்ய முன் வந்த தங்களை நான் சாக்ஷாத் கடவுளென்றே நினைக்கின்றேன்'' என்று தெரிவித்து வணங்கினான். பின் இவன் கூறியவையெல்லாம் கவனிக்காமல் ஒரே நிலையாக அந்த மங்கையர் இருவரும் உயிர் இருக்கின்றதோ போய்விட்டதோ என்றதை ஆழ்ந்து கவனிக்கலானார். கைநாடி முதலிய வற்

றைப் பார்த்தார். தான் எடுத்த பெண்மணி மிகவும் ஹீன ஸ்திதி யிலிருந்தாள். இன்னொரு மடந்தை சற்றுத் தெளிவாயிருந்தாள். கண்ணை நீக்கிப் பார்த்தார். மார்பில் மெல்லக் காதை வைத்துப் பார்த்தார். வயிறு நிறையத் தண்ணீர் நிரம்பி யிருப்பதால் மார்பில் வேகமாகப் பிராணன் அடித்துக்கொண்டு வெளிக்கிளம்பிவிடும் போல் இருந்தது. இதைக் கண்டதும் அவர் மனதில் குழப்ப மேற்பட்டு முகம் மாறியது. "உடனே படகை விசையாக விடச் செய்து கரை ஏறியபிறகு தான் டாக்டரிடம் பார்க்கவேண்டும் அதற்குள் பிராணன் நீங்கிவிட்டால் என்ன செய்வது? நாம் உதவி புரிந்தும் பயனற்றுவிடுமே" என்று எண்ணியவாறு கரையைநோக்கி விசையாய்ப் படகை விடச் செய்தார். இந்தப் படகு ஆடி ஆடி வரும் வேகத்தில் பத்மாவின் வயிற்றிலிருந்த தண்ணீர் சிறிது சிறிதாய் வாயினல் குபீர் குபீர் என்று வெளியே வரத் தொடங்கியது.

பெண்களைப் படகில் ஏற்றி அனுப்பிவிட்டு வெளியிலிருந்த கேசவ முதலியார் அங்கே சற்றுநேரம் சுற்றிப் பார்த்துக் கொண்டே உலாவிப் பின் கருங்கல் கட்டிடத்தண்டை நிறுத்தி யிருந்த தமது வண்டியிலேயே அமர்ந்தார். அங்குச் சென்ற ஜனங்களெல்லாம் திரும்பி வந்துவிட்டது கண்ட முதலியார் இன்னும் தமது செல்வப் புதல்வி வரவில்லையே என்று வழியை எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். வெகுநேரமாயும் தமது புதல்வி வாராமையால் அவர் திகிலடைந்தார். பல எண்ணங்கள் அவர் மனதில் தோன்ற ஆரம்பித்தன. ஒருகால் கப்பலின்மேலே ஏறிப் பார்க்கும் போது, கைதவறிக் கடலில் விழுந்துவிட்டாளோ; எக்காரணத்தினல் இன்னும் வரவில்லை என்று எண்ணமிட்ட வண்ணம் வீற்றிருந்த சமயம் படகை விட்டு இறங்கிய சிலர் "ஐயோ பாவம்! படகோடு கவிழ்ந்துவிட்டார்களே என்ன கால வித்தியாசம்!" என்று பேசுவது இவர் காதில் பட்டது. உடனே இவருக்குப் பெருத்த குழப்பமும், திகிலும், வேதனையும் வந்து இவரை நிலைகுலையச்செய்தன. ஒருவேளை நம்மவர்களுடைய படகு கவிழ்ந்துவிட்டதோ! என்னசெய்வேன்! பாவியேன் கூடச் செல்லாமல் தனித்து அனுப்பிவிட்டுத் துடிக்கின்றேனே! கவிழ்ந்த படகு யாருடைய தென்பதும் தெரியவில்லையே!

ஐயோ ஈசா! என் செய்வேன்? ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்து அதனால் சுகமேற்படாமல் கவலையே அடையும்படி செய்துவிட்டாய். இந்தப் பெண் குழந்தையால் சற்றுச் சந்தோஷ மடைந்து கொண்டிருந்த எம்மை என்ன செய்யப்போகிறாய்?'' என்று கலங்கித் தவித்துக்கொண்டிருந்த தருணம் இவர்களது படகும் கரையை யடைந்தது. வேதாசலம் தான் என்ன விதமான பதில் எஜமானுக்குச் சொல்வதென்பதை யறியாது தவிக்கிறான். மங்கையர்களோ உலகத்தையே மறந்து மயங்கி மூர்ச்சையாய்க் கிடக்கின்றார்கள். கூட வந்த மனிதர் வேதாசலத்தை நோக்கி "அப்பா உங்கள் எஜமானர் கரையிலிருப்பதாகச் சொன்னாயே! எங்கேயவர்? சீக்கிரம் அழைத்துக்கொண்டுவா. நாம் தாமதிக்கலாகாது. உடனே டாக்டரிடம் காட்டி முயற்சித்தால் ஒரு வேளை பிழைக்கலாம்'' என்றார். படகு கரைக்குச் சமீபத்தில் வந்ததும் கருங்கல் படி யருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த கேசவ முதலியார், அப்போது சிறிதுஇருள்சூழ்ந்துவிட்டபடியால் படகில்இருந்தவர்கள்யாரென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும் சரியாகச்சடக்கென்று வேதாசலமிருப்பதைக் கூர்ந்து கவனித்தார். அவன் முகத்தில் விவரிக்க யியலாத விதமான கலக்கமும் பயமும் குடிகொண்டிருக்கக்கண்ட முதலியார்''இதென்ன வேதாசலம் எங்கேகுழந்தைகள்?உன்னுடைய துணி ஏன் நனைந்திருக்கின்றது?'' என்று பட படத்துக் கேட்டுக்கொண்டே படகை கவனித்தார். அதற்குள் படகிலிருந்தவரும் இறங்கி வேதாசலத்தை விளித்து என்ன பேசாதிருக்கின்றீர்! வண்டி எங்கே பார்த்தீரா?''என்று கூறிய வண்ணம் மெல்ல ஒரு மடந்தையைத் தூக்கி எடுக்கலானார். இதற்குள் வேதாசலம் முதலியாரைக்கண்டுதாங்கொணாத்துயரமும் பயமும் நடுக்கமும் சேர்ந்து நாவெழாமல் வழ வழா வென்று பேசத் தொடங்கி, ''சாமி எஜமானே! இன்று படகில் சென்ற வேளை என்ன வேளையோ! பெரிய விபத்தாய் முடிந்தது. கப்பல் பார்த்துவிட்டுத் திரும்பிவருகையில் எதிரிலிருந்து நிறையச்சாமானுடன் சென்றபடகு எங்கள் படகின் மேல் மோதி அப்படியே தண்ணீரில் கவிழ்ந்துவிட்டது. நாங்களெல்லோரும் தத்தளித்திருந்த சமயம் இதோ இந்தப் புண்ணியவான் தம்முயிரை லக்ஷியம் செய்யாமல் த்ரணமாய் மதித்துத் தண்ணீரில் குதித்து நம்முடைய குழந்தையைத் தூக்கி எடுத்துத் தமது படகில் விட்டார். இதற்குள் அந்தம்மாளையும் நான் தூக்கிவிட்டேன். உடனே வேகமாகக் கரையை நோக்கி வந்து சேர்ந்தோம். நம்முடைய வண்டி எங்கே? சீக்கிரம் குழந்தையை வீட்டில் சேர்க்கவேண்டும்'' என்றான்.

இந்த விபரீதமான செய்தியைக் கேட்ட முதலியாரின் உயிர் திடீரென்று போய்விட்டதென்றே சொல்லவேண்டும். அவர் அதற்கு முன்னமேயே இன்னும் தமது அருமைக் குமாரி வாவில்லையே! என்று கவலைப்பட்டுக்கொண்டு பலவாறாய் எண்ணமிட்டுத் தவித்

திருந்த தருணம் தான் கவலைப்பட்டது போலவே கவிழ்ந்த படகு இவர்களுடையதாகவே முடிந்ததென்பதைக் கேட்டதும் அவர் மனத்தில் இவ்வளவு கலக்கந்தான் என்று நிலையிலாமல் வந்து மூண்டுவிட்டது. அந்த ஒரு நிமிஷ நேரமும் முதலியார் நெருப்பின்மீதிருப்பவர் போல் துடிதுடித்துக் கட்டிலடங்காத கிலேசத்தையும் துன்பத்தையுமடைந்து தமது குடியே முழுகிவிட்டதுபோல் எண்ணி அலறவாரம்பித்து "ஆ! என் கண்ணே! பத்மா; ஐயோ! உன்னைப் பறிகொடுத்துவிடுவேனு! என் ரத்தினமே! உனக்கா இத்தகைய ஆபத்து வரவேண்டும்? என்ன வேளையில் இன்று புறப்பட்டோமோ! என்ன செய்வேன்? உன்னை உயிருடன் திரும்பக் காண்பேனு" என்று கூவியவாறு படகருகில் வந்து சேர்ந்தார். வேதாசலம் வண்டியைக் கருங்கல் துறை யருகில் கொண்டுவந்து நிறுத்தினுன். உடனே வந்த மனிதர் பத்மத்தை ஒருசிறு குழந்தையைப்போல வாரித் தூக்கி எடுத்து மோட்டாரில் விட்டு மறுபடி வந்து இந்திராணியையும் எடுத்து வண்டியில் விடுத்தார். இதைக்கண்ட முதலியார் வந்தவரை நோக்கி "ஐயா! எங்கள் குழந்தையின் ஆபத்து சமயத்தில் உதவி புரியவந்த வள்ளலே! தங்களுடைய முகராசியும், ஆசியும் கூடி என் குழந்தை பிழைக்கவேண்டும். எங்களுக்கு அந்த வனிதாரத்தினம் ஒரே ஒரு குழந்தைதான். அதற்கும் இத்தகைய ஆபத்து வந்துவிட்டதே. என்ன செய்வேன்?" என்று பேசிக்கொண்டே இருக்கையில் வந்தவர் இடைமறுத்து வெகு வணக்கமாயும் பெருந் தன் தன்மையாயும் அன்பொழுகக் காருண்யம் ஜ்வலித்த பார்வையோடு பேசத் தொடங்கி "ஐயா! தங்களுக்கு ஒரு குறைவும் வராது. பயப்படவேண்டாம். நான் ஒன்றும் அப்படி அபாரமாய்ச் செய்துவிடவில்லை. அதற்காகத் தாங்கள் என்னை ஸ்தோத்திரம் செய்வது அழகல்ல. மனிதருக்கு மனிதர் இவ்வித சிறிய உதவியைக் கூட செய்யாவிட்டால் அவர்கள் கேவலம் மிருகத்தனத்திற்குச் சமமென்று கூறலாம். அதிருக்கட்டும். தாங்கள் இப்பொழுது நின்றுபேச இது தருணமல்ல. முதலில்குழந்தைகளைக் கவனியுங்கள். தக்கவைத்தியரைக்கொண்டு மருந்து கொடுத்து சிகிச்சை செய்யுங்கள். நம்முடைய பேச்சிற்கென்ன, பிறகு பேசிக்கொள்ளலாம். முன்னுலதைக் கவனியுங்கள்" என்ருர். இதைக் கேட்ட முதலியார் "ஐயா! கடலிலேயே முழுகிப் போனவர்களைக் காப்பாற்றிச் சேர்த்த வள்ளலாகிய தங்களது ஆசீர்வாதத்தினுல் என் குழந்தைக்கு குணமடையவேண்டும். இதோசென்று வயித்தியரிடம் காட்டுகிறேன், தங்களுடன் நின்று பேசுவதற்குக்கூடத் தற்போது அவகாசமில்லையாதலால் தாங்களும் என்னுடன்கூட என் வீட்டிற்கு வரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்" என்ருர். இதைக்கேட்டவர் அதற்கென்ன வருவதற்கு ஒன்றுமில்லை. எனக்கு இப்போது முக்கியமான அலுவலிருக்கின்ற படியால் நான் நாளை வருகிறேன். தங்கள் புதல்விக்கும் அதற்குள்

முற்றும் குணமடைந்துவிடும். அதைப்பற்றிக் கவலைவேண்டாம். தங்களுடைய இந்த ஆபத்தான சமயத்தில் நானும் கூடவிருந்து தொந்தாவு கொடுப்பது சரியல்ல. தங்களுடைய விலாசம் யாது? அதனைத் தெரிவித்தால் சித்தப்படியே வந்து பார்க்கிறேன். இவ்வமயம் இங்கு அதிக நேரம் தாமதிப்பது கூடாத காரியம். சீக்கிரம் வைத்தியரையழைத்துப் பாருங்கள்" என்றார். இதைக்கேட்ட முதலியார் அவருடைய அப்போதிய மன நிலைமையில் வேறு எவ்வித வார்த்தையும் சொல்வதற் கியலாமல் கலக்கத்தை அடைந்திருந்தாராதலால் மீண்டும், அவரை வற்புறுத்திக் கூப்பிட வேண்டுமென்பதையு மறந்து "காலையதினம்கட்டாயமாய்வரவேண்டும்.என்னுடையவிலாசம்சைதாப்பேட்டை கேசவமுதலியார் லக்ஷ்மி விலாசம் என்றால் போதும் நாங்கள் சென்று வருகிறோம்" என்று கூறியவண்ணம் வண்டியிலமர்ந்தார். அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று தற்சமயத்துக்கு வேண்டிய சிகிச்சை செய்துகொண்டதும் வண்டி சைதாப்பேட்டையை நோக்கிச் சென்று பங்களாவை யடைந்தது.

பங்களாவில் பத்மத்தின் அன்னை "குழந்தை வரும் நேரம் கடந்துவிட்டதே. இன்னும் வண்டி வரவில்லை. என்ன செய்கிறார்கள்? மணி எட்டு அடிக்கும் சமயமாய்விட்டதே! ஆறு மணிக்கெல்லாம் திரும்பிவந்துவிடலாம் என்று சொல்லிச் சென்றவர்கள் இன்னும் வரவில்லையே!" என்று ஏங்கிப் பங்களாவின்முன் தோட்டத்தின் பக்கமே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது வண்டி வந்து நின்றது. அதைக் கண்ட அந்தம்மாள் களிகொண்டு வண்டியருகில் வந்தாள். இதற்குள் முதலியார் கண்களிலிருந்து கண்ணீர் ஆறுய்ப் பெருக பெரும் விசனக் களையுற்று விகாரத்துடன் இறங்கியதைக் கண்டதும், அந்தம்மாள் திடுக்கிட்டு "இவர் முகத்தில் இத்தகைய விசனக்குறி காண்பதற்குக் காரணமென்ன?" என்று எண்ணி உற்றுக் கவனிப்பதற்குள் முதலியார் பத்மத்தை முன்போலவே தூக்கி எடுத்துக்கொண்டு வருவதைக் கண்ட லக்ஷ்மியம்மாள் துடிதுடித்தவண்ணம், "ஆ! பத்மத்திற்கு என்ன உடம்பு? ஏன் நீங்கள் தூக்குகின்றீர்கள்? அவளது துணிகள் ஏன் நனைந்திருக்கின்றன? இதென்ன விபரீதம், எனக்கு விளங்கவில்லையே! இந்திராணியும் ஏன் படுத்திருக்கிறாள்? வேதாசலம் என்ன நடந்ததப்பா. எனக்குத் தகவல் தெரியாமல் தவிக்கின்றேனே! ஏன் உன் சொக்காய் முதலியவை நனைந்திருக்கின்றன?" என்று ஒன்றன்மீதொன்றுய்ப் படபடவென்று ஆத்திரத்தோடு துடிதுடித்த வண்ணம் கேட்டாள்.

இதற்குள் வேதாசலம் நடந்த வரலாற்றை இரண்டொரு வார்த்தையில் சுருக்கமாய்க் கூறினான். அதைக் கேட்டதுதான் தாமதம்! அந்தம்மையின் குடல் நடுக்கமெடுத்துக்கொண்டது. தலைசுழலக் கண்

ணீர் அருவிபோல் பெருக இன்னதென்று விவரிக்க இயலாத குழப்பத்தையும் பதைப்பையும் தாங்கொணுத் துன்பத்தையுமடைந்தவளாய் இந்திராணியைத்தானே தூக்கி எடுத்துக்கொண்டு தன்னைமீறிய ஆவேசத்துடன் உள்ளே சென்ருள். இதற்குள் முதலியார் பத்மத்தை முன்கட்டு ஹாலில் விட்டு விட்டுத் திரும்புகையில் லக்ஷ்மியம்மாள் இந்திராவைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டாள். முதலியார் உடனே வேதாசலத்தை உடைகளை மாற்றிக்கொள்ளச் செய்து அவனை வீட்டிலேயே இருக்கும்படி சொல்லி, வண்டியை யோட்டிக் கொண்டுபோய், தங்கள் குடும்ப வைத்தியரான ஸர்ஜன் ஸாமிநாத முதலியாரை அழைத்துவரும்படி வேறு ஆளை அனுப்பினுர். இதற்குள் லக்ஷ்மியம்மாள் இருமடந்தையரின் ஈரவஸ்திரத்தைக் களைந்துவிட்டு வேறு ஆடை அணிவித்தாள். தன் மகள் அப்போதும் ப்ரக்ஞையற்றுக் கிடப்பதைக் கண்டு மனந் தாங்காமல் அலறியழத் தொடங்கிவிட்டாள். "ஐயோ! என் கண்மணீ! பத்மம் வாயைத் திறக்காமல் இவ்விதம் நீ ஒருநாளும் படுத்திருக்க நான் இந்தப் பாவி கண்ணுல் பார்த்ததில்லையே! இன்று நீ கண்மூடிப் படுத்திருப்பது என் வயிற்றைப் பற்றுகின்றதே! அந்தோ! அன்று செல்லப்பா உன்னைக் கருவிச் சென்றதை எண்ணி ராப்பகலாய்க் கண்ணீர்விட்டுக் கலங்கிக் கொண்டிருந்தாயே! அந்தத் துயரத்தின் மேலேயே உனக்கு இந்தப் பிராணுபத்தும் நேர்ந்ததோ! ஆ! இந்திராணி! உன் பிராணபதி வந்தால் நான் என்ன சொல்வேன்? அவர் எங்களை நம்பி உன்னை அனுப்பினுர். உனக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்துவிட்டதே! ஏ! பரம்பொருளே! அந்தப்பிள்ளையாண்டான் வருவதற்குள் இவளுடைய உடம்பு முற்றிலும் குணமாய்விட்டால் போதுமே. ஊரார் வீட்டுப் பிள்ளையின் மனம் எவ்வாறிருக்குமோ, நாம் அறியக்கூடுமோ! இன்று விழித்த முகத்தின் பலன் இவ்வித ஆபத்தாகவா வரவேண்டும்? ஐயோ! பத்மா! என்னை என்னசெய்ய எண்ணியிருக்கிருய்? என் வயிற்றில் இன்னதென்று விவரிக்க இயலாதவிதமான கலக்கம் உண்டாகின்றதே! உன்னைக் கண்டு உலக வாழ்விலிருந்த எங்களை கைவிட்டு விடுவாயோ கண்ணே! ஐயோ! நாங்களென்ன செய்வோம். ஆண்குழந்தையால் இன்பமடைய எண்ணித் துன்பமே யடைந்தோம். நீ எங்களை மீளாத துக்க சாகரத்தில் ஆழ்ந்து தவிக்க விட்டு விடுவாயோ! ஐயோ! இன்னும் உன் கண் திறந்து பார்க்கவில்லையே! நீ தூங்குவதில் கூட வெகு மெலுக்கையாகத்தூங்குவாயே! சிறிது காலடிசசத்தம் கேட்டாலும் எழுந்திருக்கும் சுபாவமுடைய என் கண்ணே! இன்று நான் இத்தனை கதறியும் நீ கண் விழிக்கவில்லையே! இதுவும் நான் செய்த பாவமோ! ஆ! என்னருமை பத்மம்! உன்னை ஈசன் மீண்டும் எனக்குஅளித்தால் என்னுயிர் தரிக்குமேயன்றி இல்லையேல் என்னுயிர் இப்போதே நீங்கிவிடும் போலிருக்கின்றதே! என்ன செய்வேன்? வைத்தியரை அழைக்கச் சென்றவனும்

இன்னும் வரவில்லையே! என்று கலங்கியிருந்த தருணம் முதலியார் அவ்விடத்தில் தோன்றினர்.

அவர் இந்தம்மாளைவிடப் பத்மத்தினிடத்தில் அதிகமான பிரேமையும் உள்ளார்ந்த அன்பும் வைத்துள்ளாராதலால் அந்த கோரமான படுக்கையைக் கண்டதும் அவருக்குச் சகிக்கயியலாத துக்கம் வந்துவிட்டதனுல் அதைத் தாங்காமல் அவர் அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று சற்றுநேரம் உட்கார்ந்திருந்தார். அங்கு அவருக்கு இருக்கை கொள்ளவில்லை. மேலும் தமது பத்னி கதறுவதைக் கேட்ட அவர் மனம் இன்னும் பாகாயோட வாரம்பித்தது. பத்மவல்லி அருமையான குணமுடையவள். அதனுல் அவளை முகமறியாத அன்னியர் கண்டபோதிலும் அவர்களுக்கு அவளிடம் ஒருவித பாசம் தானுகச் சுரந்துவிடும். இது இயற்கை. அவளது பெற்ரேருக்கு அத்தகைய தருணீமணியிடம் தம்மை மீறியே ஆசையும் அன்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்று முதிர்ந்துவிட்டது. மேலும் புத்திரன் அவர்களுககு நேர் விரோதியாய் விளங்குவதனுல் அந்தக் கவலை சிறிதும் அவர்கள் மனதிற் கொள்ளாதிருக்க வேண்டுமென்று கருதிய பத்மம் சகலமான அம்சங்களிலும் அவர்களை மகிழ்வித்து வந்தாள். அந்த மடமயிலாளின் ஆபத்தைக் ண்டு அவர்கள் துடிப்பது ஒரு வியப்பா? தனது தாய் தந்தையர்களின் துயரத்தைத் தணிக்கும்பொருட்டும் நல்ல விஷயத்தில் தன் புத்தியையும் விசாலிக்கச் செய்யும பொருட்டும் தினந்தோறும் கம்ப ராமாயணம், பகவத்கீதை, பட்டிணத்தடிகளின் திருப்பாடல்கள் முதலிய அரிய பெரிய நூல்களை எல்லாம் படித்து அவர்களுக்கும் சாரமூட்டித் தானும் அருந்திச் சதாகாலமும் பகவான்னம உச்சரணம் செய்து வருவாள்; தனது அண்ணன் பெற்ரேர் மகிழத் தக்கபடி வழியில் நடக்குமாறு, "ஈசா! நீ கிருபை செய்யவேண்டும்" என்று கடவுளைத் துதித்தவண்ணம் இருப்பாள். "அந்தோ! எனக்கு விவாகமாய் நான் புக்ககம் சென்றுவிட்ட பிறகு எமது பெற்ரேர் என்ன செய்வார்கள்? அதற்குள் என்னண்ணனுக்குச் சரியான புத்தி வந்துவிடாதா? அவனுல் உண்டான துயரம் நீங்கிவிடாதா என்ற கவலையே அவள் மனதில் சதா வருந்தி உறுத்திக்கொண்டிருந்தது. தன் தாயார் விசனப்படுங்காலையில் கீதையை வாசித்து அதன் சாரத்தை விரிவாக எடுத்துத் தத்துவபோதம் செய்வாள். யாருக்கு யார் என்ன சம்பந்தம்? தாயாவது மகனுவது இவைகளெல்லாம் சந்தைக் கூட்டமென்று ஒரு பாட்டில் பட்டினத்தாரும் தாயுமானவரும் தெரிவித்திருக்கிருர்கள். அதேபோல் ஒருவருக்கொருவர் என்ன சம்பந்தமிருக்கிறது? நாம் வரும்போது பிள்ளை பெண்களைக் கூடக் கொண்டு வந்தோமா? அல்லது போகும்போது கொண்டுபோகப் போகிருேமா? இவைகளெல்லாம் இடையில் வந்துசேர்ந்தவைதானே! இவை இடையிலேயே நீங்கிவிட்டதனுல் நாம்வருத்தப்படுவது கேவ

லம் அரியாமையன்றோ? மனிதருக்கு மனிதர் என்ன சம்பந்தம்? அவர்
களைக் கண்டு நாம் களிப்பதும் மடைமையன்றோ? நமக்கு ஆதாரமான
பொருள் முழு முதற் கடவுளன்றி வேறு வஸ்துவும் இவ்வுலகி
லுண்டோ? அந்த ஒரு வஸ்துதான் எக்காலத்தும், எப்போதும் அழி
யாமல் ஜ்வலித்துக்கொண்டு உலகத்தவரை ஆக்கி அவரவர்வினைக்
கேற்றவாறு வாழ்வைக் கூட்டி வைக்கும் நித்யமான வஸ்து. அதையே
நாம் துதிக்கவேண்டும். சீயும், ரத்தமும், தோலும், எலும்பும்,
மாமிசமும் நிறைந்துகிடக்கும் ஆபாஸக்களஞ்சியமாகியமானிடப் புழுக்
கள்மீது ஆசை வைத்தலைவது நன்றாக விருக்கின்றதா? அது கேவ
லம் சிறு குழந்தைகளின் விளையாட்டாகவல்லவா இருக்கிறது? நாம்
கடவுளால் ஆக்கப்பட்ட பொம்மைகள். நம்மைப் படைத்த அந்தக்
கடவுளையே நாம் துதித்தல் முறையேயன்றி நாமே பொம்மைகளாக
விருந்து நம்முடைய மூலமாக உண்டாகும் பொம்மைகளையெல்லாம்
நாம் சதமென்று எண்ணி வருந்தலாகுமா! ஈசனால் ஆக்கிய பொம்
மைகளை அவன் எவ்விதம் செய்தாலும் செய்யட்டும். நமக்
கென்ன? ஒரு சிறு குழந்தைக்கு ஜலதோஷம்பிடித்து அதனால்
அது திணறினால் அந்த அவஸ்தையை நிவர்த்திக்க நம்மாலா
குமா? அதற்கும் கையாலாகாத நாம் எதற்காக அந்தப் பொம்மை
யிடத்தில் ஆசை வைத்து ஈசனைமறந்து ஆபாசமான சம்சார
சாகரத் தொல்லையிலேயே உழன்று வருந்துவது, நாம் பூமியில் ஜனன
மாகும்போது எந்த விதமான கட்டளைகளை நமக்கு ஈசன் விதித்துள்
ளானோ அவைகளை மாத்திரம் நாம் செய்துகொண்டு அவனடியையே
சிந்தித்துக் காலத்தைக் கடத்தல்வேண்டுமேயன்றிக் கேவலமான மனி
தப் புழுக்களை நம்பி அதனால் மனத்தை நோகச் செய்துகொள்வது
சுத்தமடமையாகும். இதோ நமக்குத் திருஷ்டாந்தமாக நமது குளத்தி
விருக்கும் தாமரையை எடுத்துக்கொள்வோம். அந்தத் தாமரை தண்
ணீரிலேயே உற்பத்தி யாகின்றது. அந்தத் தாமரை யிலையில் அந்
தத் தண்ணீரைவிட்டுப் பாருங்கள். அது சற்றாகிலும் ஒட்டுகின்றதா
இல்லை. இதைக் கண்டுதான் நாம் ஆறுதல் அடையவேண்டும். நாம்
மானிடப் புழுக்களின் மூலம் ஜனிக்கின்றோம். நம்முடைய மூலமாயும்
சில புழுக்கள் ஜனிக்கின்றன. அவற்றை நாம் நம்முடையவையென்று
பாராட்டாமல் தாமரை யிலையில் படும் நீர்த் துளிகளைப்போல விலக்கு
வதுதான் சரியானவேலை. அதை விடுத்து விசனிப்பது எதற்கு? அவ
ரவர் விதிப்படி அவரவர் நடக்கின்றார்கள் அதை நாம் சிந்தித்தால்
கவை ஏற்படுமோ! நமக்கு அவைகளெல்லாம் சதமாகுமோ? நமக்கு
எது சதமென்பதைப் பட்டினத்தடிகள்—

''ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல வற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேயத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யே கம்பனே !''

என்று தெரிவிக்கிறார். அதைக்கேட்ட பின்னும் வருத்தமடையலாகுமா? ஒவ்வொரு மகானும் நமது யாக்கையைப்பற்றியும் வாழ்வைப் பற்றியும் தெரிவித்திருப்பதைப் பார்த்தால் நாம் இந்தஜன்மமெடுத்தற்கு எடுத்தோம் என்ற வெறுப்பு உண்டாகிறதேயன்றி இன்னுமிருக்கும் மனிதரிடத்தில் பற்று ஏற்படவே ஏதுவில்லை. பெரியாரெல்லாம் அப்பா! அம்மா! தாங்களோ நன்றாகத் தெரிந்த விவேகிகள். உங்களுக்குத் தெரியாத தத்துவ ஞானம் இருக்காது. அப்படி இருக்க நீங்கள் அண்ணாவைப்பற்றி வருந்துவதும் அதனால் உயிர்துறக்க எண்ணுவதும் சரியாகுமா! அவன் யார்? நீங்கள் யார்? அவனுக்கும் உங்களுக்கும் சம்பந்தமென்ன? என்றதோடு நின்றுவிட்டு நமக்கு முக்தியளிக்கும் முகுந்தனின் பாதகமலத்தடியைச் சிந்தியுங்கள். இந்த ஆசையினால் மோசம் போகவேண்டாம்!" என்று தினந்தோறும் ஓயாமல் உரைத்துத் தம்முடைய துயராற்றும் ஆரணங்கான தமது இன்பக்களஞ்சியம் படுத்திருந்த காட்சி யவர்களை உருக்கிக் கருக்கி வாட்டிக்கொண்டே இருக்கின்றது. லக்ஷ்மியம்மாளுக்கும் முதலியாருக்கும் பத்மவல்லி முன்படித்துச் சொல்லிய போதனைகளெல்லாம் இத்தருணம் நினைவில் தோன்றவேயில்லை. அத்தனை தத்துவமும் மறைந்தன. பந்த பாசமே மூண்டு கேவலமாய்ப் பிரலாபித்து அழும்படியாகச் செய்துவிட்டது. அங்குள்ள மக்கள் அவர்களைத் தேற்ற எவ்வளவோ விதத்தில் சொன்னார்கள். ஒருவிதமும் பயன்படவில்லை. வைத்தியரை யழைக்கச் சென்றவனும் வந்து சேரவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு ஒரு நிமிஷம் ஒரு பெரிய யுகமாகக் கழிந்தது. பெற்றோரிருவரும் அழுதழுது கண்களும் முகமும் ரத்தம்போல் ஆய்விட்டன. அவர்களுடைய அப்போதைய நிலைமையில் யார் உயிர் முன்னால் நீங்கிவிடுமோ என்ற சந்தேகமாகவிருந்தது. பத்மவல்லியோ கண்ணைத் திறக்கவே இல்லை. கதறுகிறவர்களைப் பார்க்கவில்லை. உயிரிருப்பதாகச் சிறிது சுவாசம் வருகின்றதிலிருந்து தெரிந்துகொள்ளலாமேயன்றி வேறுவிதமான குறிகள் எதுவுமில்லை. இவர்கள் துடி துடித்துக்கொண்டிருந்த தருணம் வீதியில் வண்டிவந்து நின்றது. உடனே முதலியார் வண்டிச் சத்தங்கேட்டு வீதிக்குச்சென்று ஸர்ஜன் சாமிநாதரை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தார். வைத்தியரைக் கண்டதும் லக்ஷ்மியம்மாள் விலகிக்கொண்டார்கள். உள்ளே வந்த வைத்தியர் பெண்களின் நாடியைப்பார்த்துவிட்டு குழாய்வைத்துப் பார்த்தார். முதலியாரும் லக்ஷ்மியம்மாளும் அவருடைய முகக்குறியையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். வைத்தியர் முகம்வாட்ட முறுவதைக் கண்டதும் அவர்களுக்குப் பெரிய திகில் வந்துவிட்டது. வந்திருப்பவரோ பெரிய வைத்தியர். என்ன செய்வதென்று பொறுமையாக விருந்தார்கள். உடனே டாக்டர் தாம் கொண்டு வந்திருந்த பெட்டியைத்

திறந்து மருந்துகளை எடுத்துப் பலவித முறையில் ப்ரயோகித்தார். பத்மத்திற்குப் பல் கிட்டி விட்டது. அவளுக்குச் சுலபத்தில் மருந்து உட்செல்லவில்லை. இந்திராவிற்குப் பல் கிட்டாமையால், அவுடதம் உட்சென்றது. "இந்திராவை வேறு தனியறையில் படுக்கவைத்து விடுவது தான் நலம். இரு நோயாளிகள் ஓர் அறையில் இருத்தலாகாது" என்று வைத்தியர் கூற அவ்வாறே அவளை வேறு ஹாலில் கொண்டு போய் படுக்கவைத்து விட்டார்கள். பத்மத்திற்கு ஒரு நெடியான மருந்தைமுகரச் செய்தார். அதற்கும் அவள் கண் திறக்கவில்லை. கண்ணைப் பலவந்தமாக நீக்கி ஏதோ மருந்தைப் போட்டார். அதிலும் கண்ணில் நீர்கூட வரவில்லை. "உடனே வண்டியைக் கோஷா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி இரண்டு நரஸுகளை அழைத்து வரச்சொல்லும். உடனே சொல்லும்" என்றார். இதைக்கேட்ட முதலியார் பதறிய வண்ணம் அவ்வாறே உத்தரவிட்டு வைத்தியரிடம் வந்து மெல்ல பயத்துடன் 'ஐயா! என்ன செய்தி, குழந்தைக்குப் பயமில்லையா! பிழைத்துக்கொள்வாளா! உங்கள் வாயின் தைரிய மொழியால் தானே எங்களுக்குத் தேறுதலாகவேண்டும்" என்றார். இதைக்கேட்ட வைத்தியர் சற்று யோசித்து "ஐயா நான் என்ன ப்ரம்மாவா! என்னால் என்னவாகும்? ஏதோ என் கையிலுள்ள மருந்தைக் கொடுத்து என்னாலான ப்ரயாசையைப் படுவேன். வேறு என்ன சொல்லக்கூடும் கடவுளிருக்கிறான். அவன்தான் பார்த்து ரக்ஷிக்கவேண்டும். இவர்களுக்கு வந்த ஆபத்தின் விவரத்தை எல்லாம் வரும்போது வண்டியோட்டியின் மூலமாயறிந்துகொண்டேன். தண்ணீரில் இறங்கி யறியாத இளம்பாவை திடீரென்று விழுந்த அதிர்ச்சியினால் மனத்தில் பலவித எண்ணங்கள் உண்டாய்ப் புத்தி சிதறுண்டதுமன்றி இவள் வயிற்றில் தண்ணீரும் நிரம்பி விட்டபடியால் மூர்ச்சையாய்க் கிடக்கிறாள். அதோடு எனக்கு இன்னொரு சந்தேகம் தோன்றுகின்றது. அதாவது இதோ அந்தம்மாளின் காலைப் பாருங்கள். பாதத்தில் ஏதோ நீரிலுள்ள விஷஜந்து படகிலிருந்து தீண்டி விட்டதாகத் தெரிகிறது. அதனால் சீதளம் அதிரித்துச் சீதளத்தின் பேரில் உடனே ஜன்னி கண்டுவிட்டது. அதன் சேஷ்டைதான் பல் கிட்டல்கூட. காலில் அந்த விடம் எப்படி நீலமாய்விட்டது பாருங்கள். அதிலிருந்து தான் விஷப்பூச்சி தீண்டியதாக எண்ணுகிறேன். நரஸுகள் வந்ததும் அதற்கான ஸிகிச்சைகளைச் செய்து பார்க்கிறேன். கடவுளிருக்கிறார்" என்றார்.

இதைக்கேட்ட இருவரும் இடியோசையைக் கேட்ட நாகம் போல் அசைவற்று நின்று விட்டார்கள். வைத்தியர் முதலியாருக்குத் தேறுதல் கூறிச் சற்று தெளியச் செய்தார், வெந்நீர் ஜலம் நன்றாகப் பெரிய பாத்திரத்தில் காய்ந்துக்கொண்டே இருக்கட்டும்" என்றார். அவ்வாறே பணிமகள் பெரிய அண்டாவில் ஜலம் காய்ச்சினாள். இதற்குள் வீதியில் வண்டி வந்தது. உடனே இரண்டு நரஸுகளின் உதவியை வைத்துக்கொண்டு காலில் கறுத்திருந்த இடத்தைக் குற்றி

அந்த ரத்தத்தை எடுத்துப் பரிசைஷ செய்தார்; அது சித மண்டலி என்ற ஒருவித விஷப்பூச்சியின் கடியே என்று தெரிந்துகொண்டார். பிறகு அனேகவிதமான மருந்துகளை முறையோடு கொடுத்து, கொள்ளு, கோதுமைத் தவிடு முதலியவற்றை வறுத்து ஒற்றடம் கொடுத்து பலவித சிகித்ஸைகள் செய்தார்கள். அனேக இஞ்செக்ஷன் செய்து இரவு வெகு நேரம் வரையில் பாடு பட்டார்கள். அங்கு வீட்டில் ஒருவராவது அன்ன ஆகாரம் கொள்ளவில்லை. பணிமக்கள் முதல் எல்லோரும் கண்ணீர்விட்ட வண்ணம் கலங்கியபடி பத்மம் கண் திறக்கும் நேரத்தைக் கண்கொட்டாது பார்த்திருந்தார்கள். வைத்தியரும் தம்மாலான முயற்சிகளைச் செய்து பார்த்துக்கொண்டே இருக்கிறார். இந்திராணிக்கு சுமார் இரவு 2-மணிக்கு சற்றுத் தெளிவு உண்டான படியால் கண்ணைத் திறந்துகொண்டாள். அப்போது அவளது கவனமெல்லாம் பத்மத்தின்மேலேயே சென்றிருந்ததாகையாலும் தாம் கடலில் விழுந்தது மட்டும் நினைவிருக்கிறதாகையாலும் தாம் கடலிலேயே இருக்கிறோமா எங்கிருக்கிறோம் என்ற யோசனையே முன்னால் உதித்தது. பிறகு சற்று நிதானித்துக்கொண்டு கண்ணை நன்றாகத் திறந்து பார்த்தாள். தான் ஒரு படுக்கையில் படுத்திருப்பது தெரிந்தது. அவளுக்குச் சற்று நினைவு உண்டாயதேயன்றிப்பேசுவதற்குப் போதுமான திடம் உண்டாகவில்லை. சற்று நேரம் கண் திறந்துபார்த்து மீண்டும் கண்களை மூடிவிட்டாள். அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த லக்ஷ்மியம்மாள் இவள் கண் திறந்ததைப் பார்த்தவுடன் வெகு சந்தோஷமடைந்து வெகு வாஞ்சையோடு அன்பு ததும்ப கனிந்த பார்வையோடு பேசத்தொடங்கி "அம்மா! இந்திரா! உனக்கு உடம்பு எப்படி இருக்கின்றது? மயக்கம் நன்றாய்த் தெளிந்துவிட்டதா?" என்று கேட்டாள். மறுபடி கண் மூடிய இந்திரா சற்றுத் தெளிவடைந்து "நான் கடலிலிருந்து எப்படிப் படுக்கையில் படுத்தேன். பத்மம் எங்கே? அவளுக்கு உடம்பு ஒன்றுமில்லாமலிருக்கிறதா?" என்ற கேள்வியை மெல்லப் பிரயாசைப்பட்டுக் கேட்டாள். இதைக்கேட்ட லக்ஷ்மியம்மாள் சற்று யோசித்து இப்போது இவளிருக்கும் நிலைமையில் பத்மத்தின் நிலைமையைக் கேட்டால் அதிக மயக்கம் வந்துவிடும். ஆகையால் அதைத் தெரிவிக்காமலிருப்பதே நலமென்று எண்ணி அன்பாய்ப் பேசத்தொடங்கி "அம்மா!இந்திரா! பத்மம் தூங்குகின்றாள். உங்களை

ஒரு மகானுபாவன் காப்பாற்றினாராம். நீ இப்போது அதிகமாய்ப் பேசாதேயம்மா. உடம்பு அதிரும். கொஞ்சம் பால் சாப்பிட்டுவிட்டுப் படுத்து நிம்மதியாகத் தூங்கு” என்றாள். இந்திராவும் அதற்குமேல் பேசச் சக்தியற்றவளாய்ப் பாலைப் பருகிவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

மணி மூன்று அடித்துவிட்டது. பத்மம் கண் விழிக்கவில்லை. வைத்தியர் தம்மாலானவற்றையெல்லாம் செய்து பார்த்துவிட்டார். ஒன்றும் பலிக்கவில்லை. உடனே அவர் மறுபடி அதிக நெடியான திராவகத்தை முகரச் செய்தார். அந்த நெடி வீட்டிலுள்ளோரையெல்லாம் கலக்கிவிட்டது. அதே நெடியால் பத்மத்திற்கு அப்போதுதான் சற்று மூச்சுத் திணர வாரம்பித்தது. அதைக்கண்ட வைத்தியருக்குச் சற்று முகம் தெளிவடைந்தது. மீண்டும் அதையே உபயோகித்து பத்மத்தைக் கண் திறக்கச் செய்தார். நான்குமணி சுமாருக்குப் பத்மம் சற்றுக் கண் திறந்தாளென்றாலும் அவளுக்கு நல்ல நினைவு வரவில்லை. ஏதோ ஜன்னியின் கூறினால் சற்றுக் கண் திறந்தாளேயன்றித் தனது உணர்வைப் பெற்றுத்திறந்தாளில்லை. பிறகு வைத்தியர் இன்னும் சில அவுடதத்தை உபயோகித்துச் சிகிச்சைகள் செய்தார். 4-30-மணிக்கு பத்மத்திற்கு அவளுடைய நினைவு கொஞ்சம் வந்தது. அவளுக்குத் தாங்கள் படகோடு கப்பலில் கவிழ்ந்ததும் அப்போது தண்ணீரில் தான் தவித்ததும் கனவு காண்பது போலத் தோன்றவாரம்பித்தன. இந்திராணி உயிர் எப்படி இருக்கின்றதோ நம்முயிர் இப்பொழுது எமனுலகுச் சென்று விட்டதோ அல்லது கடலிலேயே இன்னம் தவிக்கின்றதோ என்று எண்ணும்போது மூக்கில் முகரச்செய்த நெடியின் திணரலினால் தான் இன்னமும் கடலில்தான் தவிப்பதாக எண்ணிக்கொண்டாள். இன்னமா நம்முடைய உயிர் துடிக்கின்றது. அடடா! அப்போதே வயிறு வெடித்து விடும்போல் இருந்ததே. இந்நேரம் போகாமல் தவிக்கும் உயிர் எவ்வளவு கெட்டியாகவிருக்கவேண்டும்” என்று எண்ணினாள். அப்போது அவளது மெலிந்த மூளைக்குக் குழப்பமேற்பட்டபடியால் அப்படியே அயர்ந்துவிட்டாள். அவ்வாறே சற்றுத் தெளிவதும் சற்று மயக்கம் மேலிடுவதுமாய் இருந்தது. ஐந்து மணியடித்தது. நமது மின்னாளின் மயக்கம் முற்றும் தெளியவாரம்பித்தது. அப்போதும் அவளுக்குக் கடலில் விழுந்திருந்த நினைவே

தோன்றியது. நான் எங்கிருக்கிறேன்? கடலிலிருக்கிறேனு அல்லது வேறு எங்கிருக்கிறேன் என்பதே மீண்டும் அவளுடைய நெஞ்சிற் போராடத் தொடங்கியது. அந்த நிலையில் அவள் தத்தளித்தவாறு தன் கண்ணைத் திறந்துபார்த்தாள். அவள் கண்களின் பார்வை ஜன்னியின் விசேஷத்தினல், மங்கலாயிருந்தமையால் எங்குப் பார்த்தாலும் சிவப்பு வர்ணம் போட்டிருப்பதுபோல் இருப்பதைக்கண்ட அவள் மனதிலேயே திகிலடைந்தாள். மேலும் தான் கண்ணை விழித்துப் பார்க்கும்போது, தன்னெதிரில் நாற்காலியில் யாரோ ஓர் ஆண்பிள்ளையும் தனது பக்கலில் இருதாதிகளும் உட்கார்ந்து தனக்கு ஏதோ சிகித்சை செய்வது அவளுக்குத் தெரிந்தது. இவைகளை எல்லாங்கண்ட மயிலாள் இதென்ன நாம் பார்ப்பவையெல்லாம் சிவப்பாக இருக்கிறன. நம்மெதிரில் அன்னியமனிதர் உட்கார்ந்திருக்கிறர். பக்கத்திலும் யாரோ இருப்பதாகவும் நமக்குச் சூடாக ஏதோ செய்வதுபோலும் தோன்றுகின்றதே. இது ஒருகால் எமனுலகமோ! அவ்விடத்தில் எல்லா வஸ்துக்களும் சிவப்பாக இருக்கின்றனவோ; எதிரிலிருப்பவர் எமனுகவிருக்குமோ? நாம்செய்த பாவத்திற்காக நமக்கு இவர்கள் சூடு போடுகிறர்களோ, எதுவும் தெரியவில்லையே!" என்று நினைக்கையில் அவள் விழித்ததைக்கண்ட தாதிகள் மெல்லப் பேசத்தொடங்கி, "அம்மா உனக்கு உடம்பு எப்படி யிருக்கின்றது? பசிக்கின்றதா? ஏதாவது ஆகாரம் சாப்பிடுகின்றயா?" என்றர்கள். அவள் சொல்லிய வார்த்தை பத்மத்தின் காதிற்கு எங்கேயோ கிணற்றிலிருந்து பேசுவது போல விழுந்தது. அதற்குப் பதில் சொல்லவும் அவளால் சாத்தியமில்லாமல் போய்விட்டதால் பேசாமலிருந்துவிட்டாள். வைத்தியர் பத்மத்தருகில்சென்று, சிறிதளவு பாலில் மருந்து கலந்து அதைப் பலவந்தமாக பருகவைத்தார். அதை உட்கொண்டதும் அலுப்பும் களைப்பும் ஏற்பட்டு அயர்ந்து கண் மூடிக்கொண்டாள். பிறகு வைத்தியர் முதலியாரை நோக்கி "ஐயா! முதலியாரே உம்முடைய வயிற்றில் பாலை வார்த்து விட்டாள் இந்தமாது. இனிப் பயமில்லை. உடம்பு அலண்டிருக்கிற அலுப்பினுல் நன்றுகத் தூங்குகிறுள். அதைப்பற்றித் தாங்கள் பயப்படவேண்டாம். இன்று பகற்குள் மயக்கம் நன்றுய்த் தெளிந்துவிடும். ஆகாரம் பலவந்தமாகச் செலுத்தவேண்டாம். அவர்களாகப் பசி என்று கேட்டால் கொடுங்கள். நான்சென்று மறுபடி பத்து

மணிக்குமேல் வருகிறேன். ஏதோ தெய்வகடாக்ஷத்தினுல் குணமாய விட்டது.நான் முதலில் பார்த்தபோது எனக்குப்பயமாயிருந்தது. ஜன்னியோ தலைக்கேறி விட்டது. எப்படி குணமாகும்? என்னசெய்வது? என்றுகருதினேன். உங்களுடைய பரிதாபத்தைப்பார்த்துச்சகிக்கமுடியாதவனுய் நாம் அதைரியத்தைக் காட்டிக்கொள்ளாமல் நம்மாலான முயற்சிகளைச் செய்துபார்த்துவிடுகிறது. அதற்கும் தெளியாவிட்டால் இன்னம் பெரிய டாக்டரை யழைப்பது என்று நிச்சயித்துக் கொண்டேன்.எப்படியோ ஒருவாறு குணமாய் விட்டது.இனிப்பயமில்லை. தாங்கள்சற்றும் கவலைப்படவேண்டாம்" என்று தேறுதல் கூறினுர். இதைக் கேட்ட முதலியார் நிரம்பவும் மகிழ்ந்து மலர்ந்த முகத்துடன் வைத்தியரை நோக்கி " ஐயா ! எங்களுடைய கவலையைத் தீர்த்த தங்களுடைய அபாரமான சாமார்த்தியத்திற்கு நான் என்செய்வது, எப்படிப் பேசுவது என்பதே எனக்குத் தெரியவில்லை. என்னுடைய மனத்தை வெளியிட்டுச் சொல்வதற்கு திறனற்றவனு யிருக்கிறேன். தாங்கள் எங்கள் பொருட்டு இரவு முற்றும் பட்டினியிருந்து கண் விழித்துப் பட்ட பாட்டை என்னென்று கூறுவேன். எங்கள் குடும்பவரலாற்றை எல்லாம் தாங்களறியாதவர்களன்று. ஆகையால் எங்களுக்கு இந்தக்குழந்தையும் என்னசெய்துவிடுமோ என்று பயந்து நடுங்கிவிட்டோம். என் சம்சாரம் மயக்கத்திலே ஆழ்ந்துவிட்டாள். இன்னும் குழந்தைக்குத் தெளிந்தது அவளுக்குத் தெரியவாது. தாங்கள் தயவு செய்து பல் சுத்திசெய்து கொள்ளுங்கள். காலை போஜனம் தயாராகவிருக்கின்றது. அதை எங்களுடன் புசித்து எங்களை மகிழச்செய்யவேண்டும். தங்களுக்கு அவ்விடத்தில் எவ்வளவோ ஜோலிகளிருக்குமென்பது எங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆகையால் தாங்கள் திடீரென்று போய்விடுவீர்கள். அதற்குள் கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று மிகவும் வினயத்துடன் வேண்டினுர்.

டாக்டர் இரவு முதல் பட்டினியாகையாலும் கண்விழித்திருந்தாராகையாலும் மிக்க களைப்படைந்திருந்தமையால் முதலியார் வேண்டியதும் அதற்கு ஏற்றுக்கொண்டு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு காலை போஜனத்தையுண்டார். முதலியாரும் அவருடன் உண்ணப்பின் இருவரும் முன் கட்டு ஹாலில் வந்து உட்கார்ந்தனர்.

வைத்தி:—நான் போய் வருகிறேன். வண்டி தயார் செய்யச் சொல்லலாம் என்றார். உடனே முதலியார் தம்முடைய வண்டியைத் தயார் செய்யும்படி உத்தரவிட்டார். வண்டியும் தயாராயிற்று. முதலியார்உள்ளேசென்று தாம்பூலம்தட்டில் வைத்து அதோடு ஒரு காகிதப் பொட்டணத்தையும் வைத்து வைத்தியரிடம் கொடுத்து அனேக உபசார வார்த்தைகள் கூறி வந்தனமளித்தார். அதைக்கேட்ட வைத்தியர் "இதென்ன பொட்டணம் பெரிதாக விருக்கிறதே? நான் செய்த சிகிச்சைக்குஏற்றவாறுபில்செய்துஅனுப்புகிறேன். அதற்குள்தாங்கள் பெரிய பொட்டணத்தைக் கட்டிவிட்டீர்களே! இவையெல்லாம் தேவையில்லை. எனக்கு அத்தனை புகழ்ச்சி எதற்கு,எல்லாம் நம்மைப் படைக்கும் ஈசனின் அருளல்லவா? இவைகளெல்லாவற்றைவிட அவரையே புகழ்வதுதான் முறை" என்றார். முதலியார் பலதரம் வற்புறுத்தி அதை எடுத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தியதின் பேரில் வைத்தியர் அதைப்பெற்றுக்கொண்டு 10-மணிக்கு வருவதாகக் கூறிச்சென்றார். பிறகுதாதிகளுக்குக்காலை போஜனம் கொடுத்து உபசரித்தார்கள். அன்று இந்திராவிற்கு நன்றாகத் தெளிந்துவிட்டது. உடனே அவள் எழுந்துபத்மத்தின்விவரங்களையெல்லாம் தெரிந்துகொண்டு மிக்கவருத்தப்பட்டுப்பத்மத்தின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். லக்ஷ்மியம்மாளும் தமது புதல்விக்குக் குணமடைந்ததை எண்ணி அளவற்ற பூரிப்பும் ஆநந்தமுமடைந்து பெண்ணின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.காலை 8-மணி சுமாருக்குப் பத்மத்திற்கு நன்றாகத் தெளிவு வந்தது. அப்போது அவள் சுய உணர்வோடு கண்ணைத் திறந்து பார்த்தாள். அப்போதும் கண்ணிற்கு எல்லாம் சிவப்பாகவே தெரிந்தது. என்றாலும் முன்னவ்வளவு அதிகமாக வில்லையாகையால் அவள் கண்ணைத் திறந்து பார்த்ததும் மெல்லப் பேசத்தொடங்கி குயில் போன்ற குரலால் அம்மா! என்று கூவினாள். அங்கு பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த லக்ஷ்மியம்மாள் இவள் எப்போது பேசுவாள், எப்போது கண் விழிப்பாள் என்றே எதிர் பார்த்துக்கொண்டிருந்ததனால், அவள் அம்மா என்றழைத்தது கட்டிலடங்காக் களிப்பையுண்டாக்கியது. ஆநந்தக்கண்ணீர் பெருக அன்பாய்க் கனிந்தபார்வையோடு தேனொழுக "என் கண்மணியே!என்னவேண்டுமம்மா உனக்கு? உன் உடம்பு இப்போது எவ்வாறிருக்கிறது ? பசிக்கின்றதா ? என்ன

செய்கிறதப்பா! என் ரத்தினமே!'' என்று கேட்டாள். அதைக்கேட்ட பத்மவல்லி மெல்லப் பேசத்தொடங்கி, நான் இப்போது எங்கிருக்கிறேன்? இந்திராணி எங்கே? வேதாசலம் எங்கே? அப்பா எங்கே? என்று பல கேள்விகளைக்கேட்டாள்.

லக்ஷ்மி:—அம்மா! பத்மம்! நீ நமது வீட்டில்தான் இருக்கிறாய். உன் தந்தையும் அதோ இருக்கிறார். இந்திராணி வேதாசலம் எல்லோரும் இங்குத்தானிருக்கிறார்கள். உன் நினைவெல்லாம் கடலில் விழுந்ததிலேயே இருக்கின்றது. ஆகையால் நீ அவ்விதம் கேட்கிறாய். ஈசனருளால் யாருக்கும் எதுவும் குறைவில்லை. நீ கவலைப்படாதே. அதிகமாகப் பேசினால் உடம்பு அதிரும். பேசாதிரும்மா'' என்றாள். இதைக்கேட்ட பத்மம் ''நாங்கள் கடலில் விழுந்தவர்கள் இங்கு எப்படி வந்தோம்?'' என்றாள்.

லக்ஷ்மி:—அந்த வரலாற்றை நிதானமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இப்போது பேசாமலிரு என் கண்ணே!

பத்மம்:—(தன்னைச்சுற்றி நாற்புறமும் சுற்றிப் பார்த்து) அம்மா! என் பக்கலில் உட்கார்ந்திருப்பது என்னருமை ராஜலக்ஷ்மியம்மாளா எனக்குத் தெரியவில்லையே!

லக்ஷ்மி:—(முகவாட்டமடைந்து) அம்மா! பத்மவல்லி! உன் பக்கலில் உட்கார்ந்திருந்த நாளெல்லாம் கனவாக ஆய்விட்டனவே. இன்னும் அதை நீ நினைவாக எண்ணி யிருக்கிறாயா! என் செல்வமே! நீ பழைய கதைகளையெல்லாம் இப்போது இந்த நிலைமையில் பேசுவதே முதலில் கூடாத காரியம். நீ பேசாமலிரும்மா. உன் பக்கத்தில் இந்திராணியும் தாதிகளும் தானிருக்கிறார்கள். நீ இப்போது எதையும் கவனிக்க வேண்டாம். நாம் எப்போதும் இப்படியேதானிருப்பதாக நினைத்து மனத்தைத் தேற்றிக்கொள்ளவேண்டும். மேலும் இச்சமயம் நீ பேசாது இருத்தல்தான் நலம். நாங்கள் வேண்டுமானாலும் வெளியில் செல்கிறோம். நீ நிம்மதியாய்த் தூங்கு. உடம்பெல்லாம் ரணமாக வலிக்கும். என் செல்வச் சீமாட்டியே! கண்ணெரிச்சல் அதிகரிக்கும். பேசாமலிரும்மா.

இதற்குள் நடராஜன் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட முதலியார் முதல் நாளைய சமாசாரத்தை எல்லாம் கூறி ராத்திரி அவர் ஏன் வரவில்லை என்று கேட்டார். இதைக் கேட்ட

நடராஜன் முதல் நாளைய சம்பவங்களைக் கேட்டுத் தெரிந்ததும் மிகவும் வருந்தினான்; மீண்டும் எல்லோருக்கும் குணமாய்விட்டதைப்பற்றி சந்தோஷப்பட்டான். 'நான் சென்றிருந்த சிநேகிதன் வீட்டில் நேற்று திடீரென்று யாருக்கோ ஒரு விருந்து தயாரிக்கப்பட்டது. அதற்காக என்னைப் பலவந்தம் செய்து நிற்கவைத்து விட்டார்கள். அதனால் வரமுடியாமல் போய்விட்டது. காலையிலும் அங்கேயே இவ்வளவு நேரமாய் விட்டது.நான் கட்டாயத்தின் பேரில் வந்தேன்'' என்றான். இதற்குள் பத்து மணி சுமாராய்விட்டது. வைத்தியர் அவ்விடம் வந்தார். அப்போது பத்மம் நன்றாகத் தெளிந்திருப்பதைக் கண்டு பெரிதும் சந்தோஷப்பட்டு அவளுக்குக் கை பார்த்து மருந்து கொடுத்துவிட்டு முதலியாரை யழைத்து ''ஐயா நான் இன்று ஒரு பெரிய ஆபரேஷன் கேஸுக்காகச் செல்லவேண்டியிருப்பதால் மாலையில் என்னால் வரமுடியாது. அதற்கு இடையிலும் இன்று ஒரு நாள் கூடவே வைத்தியரிருந்து பார்த்துக்கொண்டால் மிகவும் நலமாயிருக்கும். ஆகையால் நான் என்னுடைய உதவி வைத்தியரின் விலாசத்தைத் தருகிறேன். அந்த விலாஸத்திறகு வண்டி யனுப்புங்கள். அவர் இன்று முழுதும் அப்போதைக்கப்போது வேண்டிய சிகிச்சைகளைச் செய்வார். நாளை வந்து பார்க்கிறேன். அதற்குள் நன்றாய்க் குணமாய்விடும். நான் சென்று வருகிறேன்'' என்று கூறி அவர் கீழ் பழகும் வைத்தியரின் விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டுப்போய்விட்டார். பிறகு முதலியார் நடராஜனுடன் ஸ்நான பானதிகளை முடித்துக்கொண்டு வந்து தமது வண்டி யோட்டியிடம் வைத்தியர் காட்டிய விலாஸத்தைக் கொடுத்து அவரை யழைத்து வரும்படி உத்தரவிட்டு வண்டியையனுப்பிவிட்டுத் தாம்பூலந் தரித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். அப்போது அன்று காலைப் பத்திரிகை வந்திருந்தது. அதை முதலியார் எடுத்துப் படிக்கலானார். அதில் எலக்ஷன்விஷயமாய் அனேக சமாச்சாரங்கள் நிறைந்திருந்தன. அவைகளையெல்லாம் படித்துவிட்டு மீண்டும் பக்கத்தைத் தள்ளினார். அதில் பெரிய எழுத்தில் பின் வருமாறு இருந்தது.

பெரிய ஜமீந்தாரின்மகன் திருடிவிட்டான் அவனைக் கைதுசெய்திருக்கிறார்கள்

"தாசி நீலாமணி நேற்றிரவு கலியாணவீட்டுக் கச்சேரிக்குப் போயிருந்த சமயம் அவள் வீட்டில் முல்லையூர் பிரபல ஜமீந்தார் கேசவமுதலியாரவர்களின் புதல்வன் செல்லப்பா என்னும் நாமமுடையவன் புகுந்து சுமார் 4 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வைர நகைகளையும் இன்னும் சில நகைகளையும் அவள் சயனஅறையின் பூட்டையும் இரும்புப் பெட்டியையும் மாறு சாவியின் உதவியால் திறந்து திருடிவிட்டானும். அதை அந்த வீட்டுச் சொந்தக்காரியே பார்த்துக் கொண்டு வந்து விட்டாளாம். திருடன் கையும் களவுமாய் பிடிபட்டுவிட்டான். அவனைப் போலீஸார் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். விவரம் பிறகு வரும். என்னே அநியாயம்! ஜமீந்தார் பிள்ளைகூட திருட வாரம்பித்துவிட்டால் சோதாக்கள் திருடுவதைக் கேட்க வேண்டுமோ? மற்ற விவரம் அடுத்த இதழில் வரும்."

என்று எழுதியிருந்ததைப் படித்ததுதான் அவர் அப்படியே நெருப்பின்மீது நிற்பவர்போலத் துடிதுடித்தவண்ணம், "ஆ! என்ன அநியாயம்! லக்ஷ்மி இதோபார் என்றுகூறி அப்படியே வெட்டிச்சாய்ந்தமரம் போல விழுந்துவிட்டார். அச்சமயம் லக்ஷ்மியம்மாள் அகஸ்மாத்தாய் அந்தப்பக்கம்வந்தார்கள். இந்தவிபரீத கூக்குரலைக்கேட்ட அந்தம்மாள் அவ்விடத்திற்குஓடிவந்து பத்திரிகையைஎடுத்துப்படித்தாள். அந்தோ! பெற்ற உயிர் எரிவதைக் கேட்கவேண்டுமா? "ஆ! என் செல்லப்பா! உன்புத்தி கடைசியில் இப்படியும் கெட்டுவிட்டதோ? என்ன செய்வேன்? மாரியாகிய நீ யில்லாமல் பயிராகிய நாங்கள் விசனமென்னும் தீயால் தீய்ந்திருந்த சமயம், இந்த விபரீதமும் படிக்க நேர்ந்ததே! என்ன செய்வேன்" என்று கூறியவண்ணம் தரையில் சாய்ந்தாள். இதைக்கண்ட நடராஜன், இந்திராணி, பணி மக்கள் எல்லோரும் வியப்பே வடிவாய் மாறி 'இப்படியும் அநியாயம் நடக்குமோ' என்று கலங்கிநின்று விட்டார்கள்.

182831

இனாம்! இனாம்!

முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! டைம்பீஸ் இனாம்.



'C' ரிஜிஸ்டர்! டைம்பீஸ் இனாம்.

எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு 'C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக் கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உக்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதருஸ்

பாதி விலை! ஒரு மாதம் வரையிலும் பாதி விலை!

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.



22 காரட்ரோல்ட்டு கோல்டுகைக் கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டை யுடன் அனுப்பி வைக்கப்படும்

ஸ்வான் ஹவுஸ்,

தபால் நெ. **508**, பி. டி. மதராஸ்

Fever

Thermometer of first class German make tested at a German Laboratory just imported.

Rs. 1 2 0 each. Dozen Rs. 12 0 0

Tool Box consists of 12 tools useful for every household. Strong & Durable.

Rs. 1 4 0 each

Dozen Rs. 13 8 0

Electric Pocket Lamp. Useful in every home; gives a clear and bright light.

Rs. 1 8 0 each. Dozen Rs. 15 0 0

Postage and packing extra for all.

SAMSON & Co.,
73, T. P. Koil St., Triplicane.

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

வி லா ஸ வ தி.

ஒரு இனிய தமிழ் நாவல்

இரண்டு பாகங்கள	3	0	0
கனகசபை (ஒரு துப்பறியும் நாவல்)	1	8	0
கோகிலம்	0	12	0

ஷண்முகம் கம்பேனி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

படை மருந்து.

இந்த மருந்து நாள்பட்ட படைகளை கஷ்டமில்லாமல் நிவர்த்தி செய்கிறது.

ஒரு டின் விலை. 0—6—0

பாக்கிங், ாதபல் சார்ஜ் பிரத்தியேகம்

பேரல் கம்பேனி,
136. பெரியதெருவு, திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படி வ்யாக்யாநமும், வேதாந்தியான நஞ்சீயர் செய்தருளிய ஒன்பதினாயிரப்படி வ்யாக்யாநமும், பெரியவாச்சான் பிள்ளையின் திருக்குமாரராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் செய்தருளிய பன்னீராயிரப்படி வ்யாக்யாநமும், (மற்றை மூவாயிரங்களுக்கும் வ்யாக்யாநஞ்செய்தருளிய) பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மலர்ந்தருளின இருபத்துநாலாயிரப்படி வ்யாக்யாநமும், நஞ்சீயர் சிஷ்யரான நம்பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப் பிள்ளை கேட்டபடியே பட்டோலைகொண்டு அங்ஙனமே வெளியிட்டருளிய ஈடுமுப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநமும் ஆக ஐந்து வ்யாக்யாநங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள், ஈடுமுப்பத்தாறாயிரப்படிக்கு அடையவளைந்தான் அரும்பதவுரையென்றும் சீயர் அரும்பதவுரையென்றும், இரண்டு அரும்பதவுரைகள் உண்டு.

இவ்வாறு பெருமைபெற்ற இந்தப் பகவத் விஷயத்தை அச்சிடும்படி ஆரம்பித்து நடந்துவருகின்றது. இப்போது முதல் ஐந்து பத்துக்கள் அச்சுமுடிந்து வெளியாயிருக்கின்றன. ஆறாம்பத்து அச்சு நடக்கின்றது.

சந்தாதாரர்களாவதற்கு விரும்புகிறவர்கள் நாளை டிசம்பர் மாதம் முடிவதற்குள் தங்கள் பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு உடனே அவர்கள் கீழ்க்கண்டபடி சந்தாத்தொகையை அனுப்பவேணும்.

அவர்கள் அனுப்பவேண்டிய முன்பணம் ரூபாய் - 45. இந்தத் தொகையை ஒரேதடவையில் அனுப்ப முடியாவிட்டால், முதலில் 35 ரூபாயும், பிறகு மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்வீதமும் அனுப்ப வேணும். அவ்வாறு ரூபாய் 35 அனுப்புபவருடைய பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டு, சேர்ந்த தொகைக்கு ரசீதும், முதல் ஐந்து பத்துக்களும் (ரயில்பார்சல்மூலம்) அவர் அட்ரஸுக்கு அனுப்பப்படும்.

இப்போதே ரிஜிஸ்டர் செய்து கொள்ளாமல் ஆறாம்பத்து முடிந்த பிறகு புஸ்தகம் வேண்டுபவர்களுக்குப் புஸ்தகத்தின் விலை ரூ. **60** ஆகும்.

ஒவ்வொரு பத்தும் தனித்தனி புஸ்தகமாகப் பயிண்டு செய்து சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புத்தகசாலை,

19, தென்னண்டை மாடவீதி.

திருவல்லிக்கேணி.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த
மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை
எது?

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

"நச்சினார்க்கினியன்" தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ. 2 8 0

விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு ரூ. 5 அரைப்பக்கத்திற்கு ரூ. 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதார்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

பண்டித: ம. கோபால கிருஷ்ணையர்,
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

காமதேனு.

ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.

பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

இதில் கிராமமுன்னேற்றத்திற்குறிய முக்கிய விஷயங்கள் ஐக்கிய இயக்கம், கிராமபஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்கு ரூபாய் 1—8—0 முன்பணமாகக் கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தராவ், "காமதேனு" பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்

ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் **48** - பக்கங்களுள்ள விஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடச்சந்தா இந்தியா பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0 மாதிரிக்காபி இனும்.

ஆனந்த போதினி ஆபீஸ், மதராஸ்.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமியவருஷ சித்திரை மீ முதல் எட்டு வருஷ காலமாய் தேதி தவறாமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்து லாவியதும், அப்போது நடந்த "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கறிகள் பயிரிட்டு கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபி டோமியாவுக்குப் போவதெனத் தீர்மானித்து சந்தாதாரருக்கு முன் கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கி யன்னியில் பத்திரிகை அனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்தா நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பத்திரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மென்ட்டில் மிகக் கியாதியாய் 30 வருஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜா அவர்களும் பத்திரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத்திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு" க்குச் சமானமான பத்திரிகை கிடையவேகிடையா தென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைச் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன்" அக்ஷயவருஷ சித்திரை மீ முதல்தேதி முதல் வெளிவந்திருக்கிறது. வி.பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன்கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்று கொள்ளுங்கள்.

மானேஜர் 'கிருஷிகன்" ஆபீஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

' ஒற்றுமை '

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் வெளி வரும் ஒரு தமிழ் மாதப் பத்திரிகை. பல பண்டிதர்களால் எழுதப் படும் அரிய விஷயங்களைத் தன்னகத்துக் கொண்டது. தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி வெளி வருவது. வருஷ சந்தா உள்நாடு ரூ. 1 0 0 வெளிநாடு ரூ. 1 4 0 தனிப்பிரதி உள்நாடு ரூ. 0 1 6. வெளி நாடு ரூ, 0 2 0 பிரதிகள் மதராஸ் நியூஸ் ஏஜன்ஸியிலும், ஹிகின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டேஷன் புத்தக ஸ்டால்களிலும் கிடைக்கும். சந்தா முன் பணமாக அனுப்பினால் 4 அணா லாபமாகும். ரூ. 1. ஸ்டாம்பாகவும் அனுப்பலாம். 6.வது தொகுதி 1925-ம் ஹு நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாபேட்டை, சென்னை.

ஹிதாயதுல் இஸ்லாம்
10,000 பிரதிகள் வெளியாகின்றன.

இப்பத்திரிகை மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும், இராஜாங்க சட்டங்களையும் ஒற்றுமையும் ஜாதி ஒற்றுமையும் மத ஒற்றுமையும் விவரித்து ஜாதிமத வித்தியாசமில்லாமல் எடுத்துப் பேசுகிறபடியால் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானது. இது ஒவ்வொரு தனவந்தர்களுடைய வீட்டிலும் போய் உலாவுகிறபடியால் வியாபாரிகளுக்கு அவசியமானது.

வருஷச் சந்தா	ரூ.	6	0	0
மலாய் நாடுகள்	ரூ.	8	0	0

விலாசம்:—மானேஜர்,
ஹிதாயதுல் இஸ்லாம்,
571, 3.ம் மரதானை, கொழும்பு, (சிலோன்.)

கம்மபாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் ஓர் பாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. பொது விஷயங்களும் கம்மகுல முன்னேற்ற விஷயங்களும் வெளிவரும். கிராமவாசிகளுக்கின்றி யமையாதது. வருடசந்தா தபாற் செலவுட்பட ரூபாய் ஒன்றுதான். மிகக் குறைந்த சந்தா. விளம்பரங்களுக்கு ஏற்றது. நீண்டகால விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதமுண்டு. முன் பணமனுப்புதல் வேண்டும். மற்றும் விவரங்களுக்கு எழுதுங்கள்.

R. வெங்கடசாமி நாயுடு.
பத்திராதிபர் "கம்மபாலன்"
திருத்தங்கல். சத்தூர் S. I. R.

ஆநந்த குணபோதினி.

ஒரு நூதன உயர்தர மாதப் பத்திரிகை.

பிரசித்த அனுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகை நவீன சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஒங்குவதற் குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும். லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும் ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக் கூடியது எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்தகுணபோதினி" தான் ஆடவர், மகளிர், பெரியோர் சிறியோர் எவர்கையிலும் இப் பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய வாய்க்கினிய அலங்கார வசன மழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதைத் தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆநந்த குணபோதினியின் சொற்பசந்தாவை உற்று நோக்குங்கள். வருஷசந்தா ரூபாய் ஒன்றே (ரூ 1.) இன்றே எழுதுங்கள். உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்சாலை தெரு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

தமிழ் தெரிந்தவர்கள் வெகுசுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது

27000-ஜனங்கள் வாசித்து பிரபலமடைந்தது.

எமது லேடி டிரேட்மார்க்குப் போட்ட புத்தகம்
பார்த்து வாங்குங்கள்.

மோசம் போகாதீர்கள். கவனியுங்கள்.

இப் புத்தகத்தில் சொல்லியபடி இல்லாவிட்டால்
பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

ஆங்கில-ஆசான்

60-நாளில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக்கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும்
கற்றுக்கொள்ளக்கூடியது சுலபமான
தமிழில் சுமார் 800 பக்கம்கொண்டது.

இவ்வெட்டாம் பதிப்பில் வெகு சிரமப்பட்டு 1½ ரூபாயிலிருந்து 3000 ரூபாய்வரை மாதச் சம்பளக் கணக்கும், வீட்டு வாடகைக் கணக்கும் போடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை மாத்திரம் வெளியில் 2 ரூபாய்க்கு விற்கிறார்கள். புஸ்தகத்திற்கு முந்துங்கள்.

பெரிய புத்தகம் 8-ம் பதிப்பு — விலை ரூ. 2-0-0
தபாற் செலவு — அணா 0-8-0

தி. ராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

இனிய தமிழ் நாவல்கள்

வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8	கும்பகோணம் வக்கீல் 1, 2	3	0	வஸந்த மல்லிகா	1	
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0	மேனகா 1, 2,	3	0	வித்யாஸாகரர்	1	8
மதனகல்யாணி 1,2,3	4	8	விலாஸவதி 1, 2	3	0	திவான் லொடபட சிங் பகதூர்	0	12
			பாலாமணி	2	8	மாணிக்கவாசகர்	0	8
			சௌந்தரகோகிலம் 1, 2,	3	12			

ஆரணி - குப்புசாமி முதலியார்
இயற்றியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10	தேவசுந்தரி	1	4	நாகபூஷணம் ரூ.	0	12
மதனாம்பாள் 2-பாகம்	3	0	மஞ்சளறையின் மர்மம்	1	8	அந்தப்புரக்காதல்	1	4
லோகநாயகி	1	0	மின்சாரமாயவன்	1	8	இந்திராணி	1	4
விளையாட்டுச் சாமான்	1	6	கமலசேகரன்	1	12	இரங்கநாயகி	1	4
பூங்கோதை	0	10	இந்திராபாய்	2	8	சுந்தர்ஸிங்	1	8
குணசுந்தரன்	0	12	பவளத்தீவு	3	0	கற்பகசுந்தரி	2	12
வீரநாதன்	0	12	கனகபூஷணம்	3	8	வல்லபநாச்சியார்	1	4
சுவர்ணாம்பாள்	0	12	அமராவதி	4	0	இந்திரஜித்தன்	1	4
தபால்கொள்ளைக்காரர்கள்	0	14	இரத்னபுரிரகசியம்	4	0	கமலநாதன்	1	8
பத்மாஸனி	0	14	ஆனந்தசிங்	2	0	மதனகாந்தி	1	8
தினகரசுந்தரி	1	0	கற்கோட்டை	2	0	அயாஷா	1	12
மதனபூஷணம்	1	0	லீலா	1	0	அம்புஜாக்ஷி	2	0
			புஷ்பவனம்	0	14	லண்டன் திருடர்கள்	2	12
			குலசேகரன்	1	0	மாண்டிகிருஸ்டோ	3	0
						உமர்பாக்ஷா	4	12

தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
கமலாக்ஷி	1	12	ஞானாம்பிகை	1	8	சிவஞானம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8	ஞானசம்பந்தம்	1	4	விஜயசுந்தரம்	2	0

ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
விஜயராகவன்	1	0	சந்திரகாந்தா	0	12	வரதராஜன் 2-பாகம்	2	0
இராஜேந்திரன்	1	0	மோஹன சுந்தரம்	0	12	(ஜெயரங்கன் அச்சில்)		
இராஜாம்பாள்	0	12	ஆநந்தகிருஷ்ணன்	0	12			

வத்ஸா அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி சென்னை.

வைதேகி

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட விநோதத் துப்பறியும் நாவல். இதில் கதாநாயகி தனக்கு நேரும் துன்பங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு தனது கற்பை நிலை நாட்டுவதும், துப்பறிபவர் அயோக்கியர்களின் கூட்டத்தை ஒழிக்க வலை வீசும் விதமும், இடையில் வரும் ஹாஸ்ய விநோதங்களும், உலகானுபவங்களும் படிப்பவர்க்கு இன்பமும் ஆச்சரியமும் உண்டாக்கும். அழகிய சித்திரப் படங்களுடன் கூடியது. இரண்டு பாகங்கள் விலை ரூ. 2-8-0.

ஜகன்மோகினி சந்தா நேயர்களுக்கு விலை ரூ. 2-0-0

முன் பணம் அனுப்பினால் தபாற் செலவு இனாம்.

ஜெகன்மோகினிக்கு 12 சந்தாதார் சேர்த்துக் கொடுப்பவர்க்கு ஒரு வருஷ சஞ்சிகையும், வைதேகி 2 பாகங்களும் இனாம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்.
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

திரு. ராகவாச்சாரியார் இயற்றிய நூல்கள்

1	துருவவெண்பா:—இது, இனிய செந்தமிழ் நடையில்வெண்பா வாலியற்றப்பட்ட துருவ சரித்திரத்தைக் கூறும் நூல். படிப்பவர்க்கு இன்பந்தரவல்லது. இரண்டாம் பதிப்பு விலை	0	8	0
2	ஸ்ரீ ராஜ ராஜேசுவரி மாலை:—இது, ஆதி பராசத்தியாகிய ஸ்ரீ ராஜ ராஜேசுவரி விஷயமான துதி ரூபமாயமைந்துள்ள நூறு வெண்பாக்களால் ஆகியதொரு நூல். எளிய செந்தமிழ் நடையிலியற்றப்பட்டுள்ளது. குறிப்புரையோடு கூடியது விலை	0	2	0
3	திருமால் வெண்பா :—இதுவும் திருமாலின் விஷயமான துதி ரூபமாயியற்றப்பட்டதொரு நூல் ... விலை	0	4	0
4	இராமயணச் சுருக்கம்: - இது, வடமொழியில் போக மகாராஜன் செய்துள்ள கம்ப ராமாயணத்தின் சுந்தர காண்டத்தின் மொழி பெயர்ப்பாய் எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. குறிப்புரையோடு கூடியது விலை	0	10	0

திரு. ராகவாசாரியர்,
24, வல்லப்பா அக்ரஹாரம், திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோவுக்கும்

ஒருனைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,
7. தம்புச்செட்டி வீதி, சென்னை.

Edited and Published by V. M. Parthasarathy Iyengar
Printed at the Noble Press, Triplicane.